பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 26 செவ்வாய்க்கிழமை 12.11.2024 கதிர் 005

## இனி இது ரகசியம் அல்ல!

நேற்று தேர்தல் பரப்புரைகளின் இறுதிநாள். இன்றும்நாளையும்எந்தப் பரப்புரைகளிலும் ஈடுபடமுடியாது. ஆனாலும்எங்கள்அரசியல்வாதிகளில் பலருக்கும் விதியை மீறித் (☞ 2)

## வவுனியாவில் றிசாத் – மஸ்தான் ஆதரவாளர்களிடையே முறுகல்

### றிசாத்தின் தொடரணி மீது வழிமறித்து தாக்குதல்

பொதுத் தேர்தல் வேட்பாளர்களான றிசாத் பதியுதீன் மற்றும் காதர் மஸ்தான் ஆகியோரின் ஆதரவாளர்கள் இடையே ஏற்பட்ட முறுகல் நிலை காரணமாக நேற்றிரவு வவுனியாவில் பதற்றம் நிலவியது.

வவுனியா, பட்டாணிச்சூர் பகுதியில் முன்னாள் இராஜாங்கஅமைச்சர்காதர்மஸ்தானின்பொதுக்கூட்டம் இடம்பெற்றபகுதியில்ஏற்பட்டகுழப்பநிலையில்இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர், றிசாட் பதியூதீன் பயணித்த வாகனம் உட்படத் தொடரணி வாகனங்கள் மீது தக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியா, பட்டாணிச்சூர் பகுதியில் பிரதான வீதிக்கு அருகாக நேற்று மாலை 8 மணியளவில் காதர் மஸ்தானின் பரப்புரைக் கூட்டம் இடம்பெற்றது. அப்போது அந்தப் பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் வந்த றிசாத் பதியுதீனின் ஆதரவாளர்கள் என்று கூறப்படுவோர் பொதுக்கூட்டத்தை பார்த்துக் கூச்சலிட்டு விட்டுச் சென்றிருந்தனர். (☞ 9)

## அழியப்போகும் கட்சியில் தொடர்ந்து இருக்கமுடியாது

### அதனால்தான் தனித்துப் போட்டி என்கிறார் தவராசா

அழியப்போகும் கட்சியில் தொடர்ந்து இருக்க முடியாது. அது வரலாற்றுத் தவறு. மாவை சேனாதிராசாவும் சிறீதரனும் செயலிழந்துவிட்டனர் என்று யாழ். தேர்தல் மாவட்டத்தில் மாம்பழம் சின்னத்தில் முதன்மை வேட்பாளராக போட்டியிடும் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று (☞ 9)

## திசைகாட்டியின் திட்டங்கள் தோல்வியடைந்துவிட்டன

### ரணில் விக்கிரமசிங்க குற்றச்சாட்டு

திசைகாட்டியில்இருக்கும்திட்டங்கள் அனைத்தும்தோல்வியடைந்துள்ளன. அது தொடர்பில் தற்போது உறுதிப்படுத்தப்பட்டு வருகிறது. அதனால் நாங்கள் அறிமுகப்படுத்திய பயணத்தில் செல்லுங்கள். (☞ 8)

## கொடுத்த பொய் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது திணறல்

### அரசை விமர்சிக்கின்றார் நாமல் ராஜபக்ச

ஜனாதிபதித்தேர்தல்காலத்தில்வழங்கிய பொய்யான வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல்ஆளும்தரப்புமூச்சுத்திணறுகிறது என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் அலுவலகத்தில்நேற்றுசெய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலில் கட்சி என்ற ரீதியில் பல சவால்களை (☞ 9)

## தேசிய மக்கள் சக்திக்கு யாழ்ப்பாணத்தில் ஒரு ஆசனம் தன்னும் கிட்டினாலும் தமிழருக்குப் பின்னடைவே

### வேட்பாளர் சுமந்திரன் –அழுத்தம்

தேசிய மக்கள் சக்திக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் ஓர் ஆசனம் கிடைத்தாலும் அது தமிழ் மக்களுக்கு பெரும் பின்னடைவு. தமிழ் தேசிய அடையாளம், நீண்டகாலப் போராட்டம், எத்தனையோ உயிர்களை கொடுத்திருக்கிறோம்அவைஎல்லாவற்றுக்கும் பயனில்லாமல் போய்விடும் என்று தமிழ் அரசுக் கட்சியின் யாழ். தேர்தல் மாவட்ட வேட்பாளர்ஜனாதிபதிசட்டத்தரணிசுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசியபோதே அவர் இதனைத்தெரிவித்தார். அங்குஅவர்மேலும் தெரிவித்ததாவது:

ஐம்பதுபஸ்ஸில்அநுரகுமாரதிஸநாயக்க யாழ்ப்பாணம்வந்துகூட்டம்நடத்தினார். அவர் அந்தக் கூட்டத்தில் சிங்களத்தில் பேசியது அங்கிருந்தவர்களுக்கு விளங்கியிருக்கும்.

இந்த தேர்தலின்போது அமைச்சுப் பதவி பற்றி ஒவ்வொருவரும் தங்களுக்குள் பேசுகிறார்கள். ஜனாதிபதி எனக்கு வெளிவிவகார அமைச்சுப் பதவி (☞ 2)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்; பிள்ளையானிடம் சிஐடி விசாரணை

### வாக்குமூலம் பெற இன்று அழைப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் பிள்ளையான் எனப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தனிடத்தில் சி.ஐ.டி.யினர் விசாரணை ஆரம்பிக்கப் படவுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சனல்4இல்தெரிவிக்கப்பட்டகுற்றச்சாட்டுகள் தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக இன்று சிஜடியினரின் விசாரணைக்கு ஆஜராகுமாறு பிள்ளையானுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் (☞ 9)

## விசாரணைக்குப் போகமாட்டேன் எம்.பியாகவே அங்கு செல்வேன்

### பிள்ளையான் திட்டவட்டம்

என்னை விசாரணைக்கு வரும்படி இதுவரை அழைப்புக் கிடைக்கவில்லை. அப்படியே கிடைத்தாலும் போகமாட்டேன். தேர்தல் முடீந்து நாடாளுமன்ற உறுப்பினராகத்தான் விசாரணைக்குச் செல்வேன் என்று தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

வாழைச்சேனையில் நேற்று நடைபெற்ற இறுதி தேர்தல் கூட்டத்தில் உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

சில மணி நேரத்தின் முன் ஈஸ்டர் குண்டு தாக்குதல் தொடர்பாக என்னிடம் விசாரணை நடத்தப்படவுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்ததாக சில ஊடகங்கள் மூலமாக அறிந்தேன். ஆனால் எனக்கு எந்த அழைப்பும் இதுவரை கிடைக்கவில்லை.

பொலிஸ் திணைக்களம் சோடனை செய்து நாடகம் ஆடுகிறது. அப்படி (☞ 9)



## அடிபணியப்போவதில்லை என்று கூறிவிட்டு எரிபொருள் விலைச் சூத்திரத்தின் பிணைக்கைதியாகிவிட்டார் அநுர

### சஜித் பிரேமதாச நக்கல்

எரிபொருள் விலை சூத்திரத்திற்கு தாம் அடிபணியப்போவதில்லை என கூறிய அனுரகுமார திஸாநாயக்க, எரிபொருள் விலை சூத்திரத்தின் பிணைக்கைதியாக மாறியுள்ளார். கடைசியாக பணக்கார வர்க்கம் பயன்படுத்தும் எரிபொருள் விலைகளைகுறைத்துள்ளனர் என்று சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

2024 பொதுத் தேர்தலை இலக்காக்கொண்டுமஹரகம பிரதேச மக்களுடனான சந்திப்பொன்று நேற்று ஐக்கிய மக்கள் சக்தியினதும் ஐக்கிய மக்கள் கூட்டணியினதும் தலைவரான சஜித் பிரேமதாச தலைமையில் இடம்பெற்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் காமினிதிலகசிறியால்ஏற்பாடு செய்யப்பட்ட இந்தச் சந்திப்பில் கட்சிசெயற்பாட்டாளர்கள் (☞ 9)

## தேர்தல் பரப்புரைகளில் இனி ஈடுபட்டால் சட்ட நடவடிக்கை

### தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இனி தேர்தல் பரப்புரைகளில் ஈடுபடுவது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. மீறிப் பரப்புரையில் ஈடுபடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போது (☞ 8)

## அதீத கற்பனையில் மிதக்காமல் சிறந்தோரை தெரிவுசெய்யுங்கள்

### தமிழ் இளைஞர்களுக்கு –சுரேஸ் ஆலோசனை

இளைஞர்கள், யுவதிகள் அதீத கற்பனையில் மிதக்காமல் இந்த கால கட்டத்தில் யார் நாடாளுமன்றம் சென்றால் சிறந்தது என்பதை பார்த்து உரியவர்களைநாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்ய வேண்டும் என்று ஜனநாயகதமிழ்தேசியகூட்டணியின் வேட்பாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்திற்குவந்தஜனாதிபதி சிலகருத்துக்களைவெளியிட்டுள்ளார். ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னரும் யாழ்ப்பாணம் வருகைதந்த ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க (☞ 8)

## உயர் தரப் பரீட்சையை பிற்போடக் கோரிக்கை

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர் தரப் பரீட்சைப் பாடத்திட்டங்கள் இன்னும் பூர்த்தி செய்யப்படாத காரணத்தால் அந்தப் பரீட்சையைப் பிற்போடவேண்டும் என்று முன்னாள்நாடாளுமன்றஉதயகம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள சர்வஜன சக்தி கட்சி அலுவலகத்தில்நேற்றுசெய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் (☞ 8)

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

திருட்டுத்தனம் செய்வதற்குச் சொல்லியா கொடுக்கவேண்டும். அரச அதிகாரிகள் கிழிக்கக் கிழிக்க சளைக்காமல் கிழித்த இடத்திலேயேசுவரொட்டிகளைமீண்டும்ஒட்டிக் காசைக் கிழித்தெறிவதில் வல்லவர்களான எமது அரசியல்வாதிகள் எப்படியும் இந்த இரு நாள்களும்கூடச் சும்மா இருக்கப் போவதில்லை. ஏதாவது திருட்டுத் தனம் செய்து பரப்புரை செய்வார்கள் என்று திடமாக நம்பலாம். அதற்கெல்லாம் அடிமைப்பட்டுவிடாமல் அமைதியாக இருந்து சிந்தித்து தமிழர்களுக்கு எது நல்லது என்று கருதி வாக்காளர்கள் வாக்களிக்கவேண்டும்.

தமிழர்கள் விடுதலைப் போராட்டத்தின் வடிவங்களை மாற்றலாம். ஆனால் இலக்கை அடையும் வரைக்கும் அந்த விடுதலை வேட்கையை கைவிட்டுவிட முடியாது என்பது எனது கருத்து. போலித் தேசியவாதிகளும் தேசியப்போலிகளும் மக்கள் நலனுக்காகவே உழைக்கின்றோம் என்று கூறிக்கொண்டு எதிர்காலச் சமூகத்தைச் சீரழிக்கும் வகையில் செயற்படும் அரசியல் நடிகர்களும் தமிழ்த் தேசிய அரசியல் மீதான வெறுப்பை விரக்தியை மக்களிடம் ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நானும் ஏற்றுக்கொள்கின்றேன். அது தமிழ்த் தேசியத்தின் தவறல்ல. அதைத் தமது அரசியலுக்கான ஆயுதமாகப் பயன்படுத்திக்கொண்டவர்களின்தவறு. தமிழ்த் தேசியம் தமிழர்களின் ஒற்றுமை, வளர்ச்சி, தேசக் கட்டுமானத்திற்கு ஆதாரமானது. எனவே யாரால் அந்தத் தமிழ்த் தேசியத்தை முன்னெடுக்க முடியுமோ அவர்களையே தெரிவு செய்யுங்கள். இறுதிநாள் என்பதால் நானும் ஒரு பரப்புரைச் செய்துகொண்டேன் என்றுவிட்டு,

நேற்றைய இறுதிநாளில்யாழ்ப்பாணத்தில் பகலில் மணிக்கொரு ஊடகச் சந்திப்புக்கள் நடந்தன. இதுஇதற்குமுன்னையதேர்தல்களில் பார்க்க முடியாத புதிய அனுபவமாக இருந்தது. பல செய்தியாளர்களைத் துரோகிகள் என்றவர்களும், இராணுவப் புலனாய்வாளர்களுக்குப்பணியாற்றுபவர்கள் என்றவர்களும்கூடசெய்தியாளர்சந்திப்புக்களை நடத்தினார்கள் என்பது இன்னும் விசேசம். தனக்குத் தனக்கென்றால் சுளகு படக்குப் படக்கு என்னுமாம் என்று முன்னோர்கள் சும்மாவா சொன்னார்கள்.

மாலையில் பல கட்சிகள் தேர்தல் கூட்டங்களை நடத்தின. எல்லாக் கட்சிகளுமே மாபெரும் கூட்டம் என்றுதான் அறிவித்திருந்தன. என்றபோதும்தேசியமக்கள் சக்தி அளவிற்கு எந்தத் தமிழ்க் கட்சியாலும் ஆட்களை ஏற்றிவந்து கூட்டங்களில் இறக்க முடிந்திருக்கவில்லை என்ற உண்மையை ஏற்றுக்கொண்டுதானாகவேண்டும். தமிழ் அரசுக் கட்சியில் நேற்றைய இறுதிக் கட்டத்தில்கூட விட்டேனா பார் என்று இரண்டு அணியினரும் இரண்டு கூட்டங்களை நடத்தினர். சுமந்திரன் அணியினருடன் தன்னை அடையாளப்படுத்துவதில்லை, தான் தனித்தே தேர்தலை எதிர்கொள்கின்றேன் என்பதை மக்களுக்கு வெளிப்படுத்துவதையே தனது தேர்தல் உத்தியாகக் கொண்டிருக்கும் சிறீதரன் கிளிநொச்சியில் தனது இறுதிக் கூட்டத்தை நடத்தினார். ஆனால் கட்சியின் கூட்டம் அதன் மூத்த துணைத் தலைவர் சிவஞானம் தலைமையில் நல்லூர் கிட்டுப் பூங்காவில் நேற்று மாலை இடம்பெற்றது. சுமந்திரன் அணியினர் அந்தக் கூட்டத்தில்தான் கலந்துகொண்டனர். சிறீதரன் நடத்திய கூட்டத்தில் ஆர்னோல்ட் மற்றும் இளங்கோவன் போன்று அவரது தரப்பினர் என்று அடையாளப்படுத்தப்படுபவர்கள் கலந்துகொண்டனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்றத் தேர்தலுக்கான இறுதிப் பரப்புரைக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் நேற்று திங்கட்கிழமை இரவு நடைபெற்றது.

இதில்தமிழ்த்தேசியமக்கள்முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் தலைமையிலான வேட்பாளர்கள் கலந்துகொண்டு தமது உரைகளை நிகழ்த்தினர்.

ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி வேட்பாளர்கள் பலர் பங்கேற்ற முதலும் இறுதியுமான தேர்தல் பரப்புரைக் கூட்டம் சுன்னாகத்தில் புளொட் கட்சியின் ஏற்பாட்டில் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றது.

இத்தேர்தல் பரப்புரை கூட்டத்தில், த.சித்தார்த்தன், கஜதீபன், எம்.கே.சிவாஜிலிங்கம், சுரேஷ்பிரேமச்சந்திரன், சசிகலா ரவிராஜ் ஆகிய வேட்பாளர்களும் தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் மூத சட்டத்தரணி என். சிறீகாந்தாவும் பங்கேற்று உரை நிகழ்த்தி இருந்தனர். ரெலோ மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சி வேட்பாளர்கள் இந்தக் கூட்டத்தில் மிஸ்ஸிங். ரெலோ வேட்பாளர் சுரேன் குருசாமிக்கு எதிராக நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்கு இருப்பதால் அவரால் தமது வெற்றிக்கும் பாதிப்பு ஏற்படுமோ என்று அஞ்சும் மற்றைய வேட்பாளர்கள் அவரை வெட்டிவிட்டு ஓடுவதிலேயே குறியாக இருந்தார்கள். சுரேனால் ஜனநாயகக் கூட்டணிக்கு அழைத்து வரப்பட்ட சசிகலாவேகூட இப்போது மற்றவர்களுடன் சேர்ந்துகொண்டு அவரை வெட்டிவிட்டுவிட்டார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்புமாவட்டநாடாளுமன்றவேட்பாளர் சாணக்கியனின் இறுதிப் பரப்புரைக் கூட்டம் கல்லடிப் பாலத்துக்கு அருகாமையில் நேற்று நடைபெற்றது.

இந்தத் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் கூட்டிய கூட்டங்களிலேயே அதிக எண்ணிக்கையான மக்கள் பங்கேற்ற கூட்டம் என்று இதைத்தான் சொல்லலாம். இப்போதைக்கு தமிழ் அரசுக் கட்சிக்கு அதிக ஆசனங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படும் மாவட்டங்களிலும் மட்டக்களப்பே முன்னணியில் இருக்கின்றது. அங்கேதமிழ்த்தேசியப்பொதுக்கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் அரியநேந்திரனும் தமிழ் அரசுக் கட்சிக்கே ஆதரவு தெரிவித்து பரப்புரை மேற்கொண்டிருந்தார்.

சுயேச்சைகள் குழுக்களில் 'பசு' சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசிய சக்தி என்ற பெயருக்குப்பரிணாமவளர்ச்சிஅடைந்திருக்கும் தமிழர் சம உரிமை இயக்க வேட்பாளர்களின் பரப்புரைக் கூ-ட்டம் பொன்னாலையில் நேற்று மாலை இடம்பெற்றது. அடங்கமறு, திமிறி எழு, திருப்பி அடி என்கிற கோசத்துடன் இந்தக் கூட்டம் இடம்பெற்றது. சுயேச்சைக் குழுக்களிலேயே இந்தக் குழு மட்டும்தான் தேர்தல் பரப்புரைப் பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தியிருக்கின்றது. தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பிலிருந்து அரியநேத்திரனுக்கு வாக்குகளைப் பெற்றுக்கொடுப்பதில் உண்மையான பெரும் பங்காற்றிய பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் தேர்தலில் களமிறங்கியுள்ள சுயேச்சை இது.

.**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## யாழ்ப்பாணத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்போகிறார் என உதய கம்மன்பில சொன்னார்.

2019 ஆண்டு அநுர குமார திஸநாயக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார். 2022 நாடாளுமன்றில் நடந்த ஜனாதிபதி தெரிவில் 3 வாக்குகளை அநுர குமார திஸநாயக்க பெற்றார். அதன் பின்னர் அநுர உரையாற்றியபோது சுமந்திரன் பிரதமராக இருக்கவேண்டும் எனக் கூறினார். இதனை ஹன்சாட்டைப் பார்த்துத் தெரிந்து கொள்ள முடியும். அதற்காக எனக்கு யாரும் பிரதமர் பதவி தந்துவிடவில்லை.

எங்கள் கட்சியில் வேட்பாளர் நியமனம் கேட்டுக் கிடைக்கவில்லை என்பதற்காக சிலர் மாம்பழத்தைத் தூக்கி நடனமாடுகின்றார். 96 ஆம் ஆண்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் தவராஜா யார் என்பது தெரிவிக்கப்பட்டுள்ளது. தவராஜா ஐக்கிய தேசிய கட்சியின் நிர்வாக சபை உறுப்பினர். தவராஜா தற்போது மானஸ்தர் போலக் கதைக்கிறார்.

எமது கட்சியில் யாராவது மதுபானசாலைக்குச் சிபாரிசு செய்தமை தெரியவந்தால்அவர்கள்பதவியைராஜினாமா செய்யவேண்டும்.

ஜனாதிபதியாக உள்ளவரின் கட்சி நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை எடுக்கும் வழக்கத்ததின்படி தேசிய மக்கள் சக்திக்கு சாதாரண பெரும்பான்மை கிடைக்கலாம். யாழில்நடந்தகூட்டத்தில்தமிழ் தேசியப் பிரச்சினை இந்நாட்டில் இருப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க மூச்சும் விடவில்லை.

தமிழ் மக்கள் மாற்றம் என்ற அலையில் மாண்டுபோகக் கூடாது. மாற்றம் என்பது தடுமாற்றமாகி உள்ளதாக பத்திரிகை ஒன்று ஆசிரியர் தலையங்கம் எழுதியுள்ளது. தேசிய மக்கள் சக்தி ஊழல்வாதிகள் அல்லர். ஆனால் தமிழ்த் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வில் மௌனம் காக்கின்றனர்.

தேசிய மக்கள் சக்திக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் ஓர் ஆசனம் கிடைத்தாலும் அது தமிழ் மக்களுக்கு பெரும் பின்னடைவு. தமிழ் தேசிய அடையாளம், நீண்டகாலப் போராட்டம், எத்தனையோ உயிர்களை

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# நாம் ஒற்றையாட்சியை ஏற்றால் மாவீரர் தியாகம் வீணாகிவிடும்

## கஜேந்திரகுமார் தெரிவிப்பு

நாம் ஒற்றையாட்சி அரசமைப்பையோ அதன் அடடையிலான 13ஆவது திருத்ததையோ ஏற்றுகொண்டால், இத்தனை காலமும் எமது மக்களும் மாவீரர்களும் செய்த அர்ப்பணிப்பும் தியாகமும் வீணாகிவிடும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை வேட்பாளர் கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் ஒற்றையாட்சி அரசமைப்பையோ அதன் அடடையிலான 13ஆவது திருத்ததையோ ஏற்றுகொண்டால், இத்தனை காலமும் எமது மக்களும் மாவீரர்களும் செய்த அர்ப்பணிப்பும் தியாகமும் வீணாகிவிடும். அப்படியான ஒற்றையாட்சி அரசமைப்பை உறுதியாக நிராகரிப்பதன் மூலமே எம்மீதான வரலாற்றுப் பழியை தவிர்க்க முடியும்.

இலங்கையின் கடந்த இரண்டு அரசமைப்பு உருவாக்கத்திலும் தமிழர்களது அரசியல் அபிலாசைகள் கருத்தில் கொள்ளப்படாமையை அடுத்து தமிழர்கள் அதிலிருந்து வெளியேறியமையினால் அரசமைப்புகள் இந்த நாட்டின் இரண்டாவது பெரிய தேசிய இனமாகிய தமிழர்களின் பங்களிப்பின்றியே உருவாகி இருக்கின்றன. அதனால் அந்த அரசியலமைப்பின் தார்மீக சட்டவலு குறைந்து இருக்கின்றது. எமது மண்ணில் ஒரு இனப் பிரச்சினை இருக்கிறது. இந்த நாட்டின் இரண்டாவது பெரிய தேசிய இனத்தை ஒடுக்கியே இந்த நாட்டின் உயரிய சட்டமாகிய அரசமைப்பு உருவாகி இருக்கின்றது என்ற செய்தியை இதுவரை காலமும் சொல்லி வந்திருக்கின்றோம்.

அதனால்தான் ஐநா சபையிலும் சரி சர்வதேச அரங்குகளிலும்சரிதமிழர்களதுபிரச்சினைகுறித்த பேச்சுக்கு வரும் ஒவ்வொரு வேளையிலும் பாதிக்கப்பட்டமக்களின்கருத்துக்களைகவனத்தில் கொண்டு புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் மூலமே இந்த இனப் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்கின்ற முடிவு எடுக்கப்படுகின்றது

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின்ஒவ்வொருவருட தீர்மானங்களிலும் எமக்குப் பெரும் விமர்சனங்கள் இருக்கின்ற போதிலும்அந்தத்தீர்மானங்களில்கூடபாதிக்கப்பட்ட மக்களின் கரிசனையை, தேவைகளை கருத்தில் எடுத்து புதிய அரசமைப்பை உருவாக்குங்கள் என்கின்ற யோசனை உள்ளடக்கப்படுகின்றது.

அந்த வகையில் அநுகுமார அரசும் இந்த நாடாளுமன்ற தேர்தல் முடிவடைந்த பின்னர் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்க இருப்பதாக அறிவித்திருக்கிறது. அந்த அரசமைப்பு 2015 முதல் 2019 வகையான காலப்பகுதியில் உருவான ஒற்றையாட்சியைப் பேணுகின்ற பௌத்த மத மேலாதிக்கத்தை பேணுகின்ற ஏக்கிய ராஜ்ஜிய இடைக்கால வரைபை மையப்படுத்தியே அமையும் என கூறி இருக்கிறார்கள்.

வடக்கு கிழக்கில் ஜேவிபிக்கு ஆசனங்கள் கிடைக்காது என்பது ஜேவிபிக்கு நன்றாகவே தெரியும். ஜேவிபி தமிழர்களுக்கு செய்த கொடுமைகள் வரலாற்று ரீதியாக செய்த அநியாயங்கள் தமிழர்கள் மனதில் ஆழப் பதிந்து இருக்கும் என்பது ஜேவிபி நன்றாக தெரியும் அப்படியானால் இந்த உத்தேச அரசமைப்பு வரைவைமேற்கொண்டுசெல்வதற்குஅவர்களிடம் இருக்கும் திட்டம் என்ன?

ஒற்றை ஆட்சியை மையப்படுத்திய பௌத்த மத மேலாதிக்கத்தை கொண்டிருக்கின்ற அந்த உத்தேச எயக்கிய ராஜ்ய அரசியலமைப்பு வரைவு உருவான காலத்தில் வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவத்துவப்படுத்தி 18 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்திருந்தார்கள். அவர்கள் அனைவரும் அந்த ஒற்றை ஆட்சி அரசமைப்பை ஆதரித்தே இருந்தார்கள். இப்பொழுது ஜேவிபியின் எதிர்பார்ப்பு என்னவெனில் அந்த 19 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்போது வேறுவேறாகப் பிரிந்து நின்றாலும் அந்த ஒற்றை ஆட்சி அரசமைப்பை நிறைவேற்றும் நேரத்தில் அவர்கள் வழமை போலவே அதற்கு ஆதரவளிப்பார்கள் என்பதுதான் அப்படி அந்த ஒற்றை ஆட்சி அமைப்பை ஏற்றுக் கொள்ளக் கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 10 பேராவது அவர்களுக்கு கிடைப்பின் அவர்களை வைத்துக்கொண்டு, வரலாற்றில் முதல்முறையாக தமிழர்களின் சம்மதத்தோடு ஒற்றையாடசி அரசமைப்பை, பௌத்த மேலாதிக்கத்தை வைத்திருக்கின்ற அரசமைப்பை நிறைவேற்றி விட்டோம் என்கின்ற படத்தை அவர்கள் வெளியுலகத்திற்கு காட்டலாம்.

அதன்பின்னர்இலங்கையின்இனப்பிரச்சினை தீர்ந்துவிட்டது எனக்கூறி ஸ்ரீ லங்கா மீதான அழுத்தங்களை தவிர்த்துக் கொள்ளலாம் என்பதுதான். ஆகவே அந்த இடைக்கால அறிக்கை எவ்வளவு ஆபத்தானது என்பதை மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும் உத்தேச அரசமைப்பு வலியுறுத்துகின்ற ஆட்சி முறை தற்போது இருக்கும் ஒற்றை ஆட்சி முறையைவிட மிக இறுக்கமானது.

இதை மிகத் தெளிவாகவே 2015இல் நாடாளுமன்றத்தை அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றி அதன் அங்குரார்பன உரையில் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெளிவாகக் கூறியிருந்தார்.

பெரிய பிரித்தானியா மற்றும் உலகின் பல்வேறு ஒற்றை ஆட்சி நாடுகளை உதாரணம் காட்டி அங்கிருக்கும் ஒற்றை ஆட்சி முறைகளில் சில இனத்துவ குழுங்களுக்கு இருக்கின்ற தனித்துவ உரிமைகளை சுட்டிக்காட்டி (பெரிய பிரித்தானியாவில் நான்கு தேசங்ககளை அங்கீகரிக்கின்ற தன்மை போன்றன அவையெல்லாம் இலங்கைக்கு பொருந்தாது எனவே இலங்கைக்கு பொருத்தமான சிங்கள பௌத்த மீலாதிக்கத்தை மையப்படுத்திய புதிய ஒரு ஒற்றையாட்சி முறைமையை மையப்படுத்திய அரசியலமைப்பை கொண்டு வர வேண்டும் என வலியுறுத்தி இருந்தார்

அதனால்தான் புதிய அரசமைப்பு வரைவின் இடைக்கால அறிக்கையில் இறைமை பகிரப்பட மாட்டாது எனத் தெளிவாகக் கூறியிருந்தார்கள். சமஷ்டிகட்டமைப்புஒன்றின்மிகஅடிப்படைப்பண்பு பகிரப்பட்டஇறைமை. ஒற்றைஆட்சியின்போதுஇது பகிரப்பட்டிருக்ககாது. ஆனால் அந்த ஒற்றையாட்சி அரசமைப்பின் வரைபை உருவாக்கிய தமிழ் அரசுக் கட்சியை சேர்ந்த சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அது பெயர் பலகை இல்லாத சமஸ்டிதான்என்றுகூறித்திரிகிறார்கள். தமிழ்அரசுக் கட்சியின் முதலாவது தேசிய மாநாட்டில் தமிழர்கள் ஒரு தேச அந்தஸ்துள்ளவர்கள் சமஸ்டிதான் நமக்கு தீர்வு என்று இருக்கின்றபோது வரலாறும் எமக்கு அதை கற்பித்து தந்திருக்கின்றபோது இப்போது புதிதாக சிலர் அந்தப் பெயர் பலகை தேவையில்லை உள்ளடக்கம் போதும் என்று சொல்லித் தருகிறார்கள். ஆனால் அந்தப் பெயர் பலகை தமிழுக்கு மட்டும்தான் சிங்க ளத்தில் மிகத் தெளிவாக அது ஏக்கிய ராஜ்ய என்று பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

இலங்கைஅரசமைப்பின்படிஅரசமைப்பிலோ அல்லத்உ எந்த சட்டமூலங்களிலோ ஏதாவது சந்தேகம் ஏற்படின் இறுதி முடிவாக சிங்களத்தில் இருப்பதே ஏற்றுக்கொள்ளப்படும் என்பதுதான் சட்டம்..

இந்த அரசமைப்பைத்தான் நிறைவேற்ற அநுரகுமார எண்ணி இருக்கிறார். வரலாற்றில் முதல் தடவையாக தமிழர்கள தேச அந்தஸ்தை நாங்களாகவே விரும்பி கைவிட்டு இந்த ஒற்றையாட்சி அரசமைப்பை ஏற்றுக்கொள்ளப் போகிறோமா அந்த வரலாற்று துரோகத்தை இழைக்கப் போகிறோமா என்று எங்களை நாங்களே கேட்டுக்கொள்வோம். இந்த உத்தேச அரசமைப்பைநிறைவேற்றத்தான் ஏனைய தமிழ் கட்சிகள் உங்களிடம் வாக்கு கேட்கின்றனர.

இதற்காகவா 50,000 போராளிகள் தங்கள் உயிரை கொடுத்தார்கள் இதற்காகவா ஏறத்தாழ 1.5 லட்சம் மக்கள் உயிர்விட்டார்கள்? இறுதிக்கட்ட போர் தொடங்கிய காலப் பகுதியில் சர்வதேச சமூகம் இயக்கத்திற்கு ஒரு செய்தியை அனுப்ப முனைந்தது ஒற்றையாட்சி அமைப்பின் கீழான 13 ஆம் திருத்தத்தின் அடிப்படையிலான தீர்வை ஒரு ஆரம்பபுள்ளியாக ஏற்றுக் கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். ஆனால் தேசியத் தலைவரும் அதை அடியோடு நிராகரித்துவிட்டார் அவருக்கு தெரியும் ஒற்றை ஆட்சி அமைப்பு என்பது ஒரு முற்றுப்புள்ளி, அதை ஆரம்பப் புள்ளியாக்கி அதிலிருந்து மேகே நகரவே முடியாது என்பது.

அதுபோலவேபோரின் இறுதிகாலகட்டத்திலும் இதே செய்தி அனுப்பப்பட்டது அதற்கும் தேசிய தலைவர் அதே பதிலையே கொடுத்திருந்தார். ஒற்றை ஆட்சியின் கீழான 13ஆம் திருத்தத்தை ஏற்றுக் கொண்டால் நமது தேசத்தின் உருவம் இருக்கும் ஆனால் உள்ளே வெறும் கோதுதான் மிஞ்சும் .

இப்படியாக ஒரு இனப்படுகொலையின் பின்னர்கூட நமது மக்கள் 13ஆம் திருத்தத்தை ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. உயிர்கொடுத்து எமது நிலைப்பாடு காப்பாற்றப்படிருக்கிறது. அதை விலைபேச நாம் அனுமதிக்கப் போகிறோமா இனப்படுகொலை நடந்து 15 வருடங்களாக தமிழ் மக்கள் தேர்தல்கள் மூலமும் ஒரு சமஷ்டிக்காகவே ஆணையை வழங்கி வந்திருக்கின்றார்கள். ஆனால் இந்த முறை முதல் முறையாக அந்த ஒற்றை ஆட்சி அரசமைப்பை நிறைவேற்ற ஆணை கேட்டு உங்கள் முன் வந்திருக்கிறார்கள். ஆகவே எனது அன்பார்ந்த தமிழ் மக்களே இந்த தேர்தலில் உங்கள் முன் இரண்டு தெரிவுகள்தான் இருக்கின்றது. ஒன்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியை ஆதரித்தல் அதன் மூலம் இந்த உரிமைக்கான பயணத்தை உயிர்ப்புடன் வைத்திருத்தல். இரண்டாவது தெரிவு ஏனைய தமிழ்கட்சிகளுக்குவாக்களித்துநாம்உயிகொடுத்து வளர்த்த போராட்டத்தை விலை பேசி விற்றல். ஆழமாகச் சிந்தித்து உங்கள் முடிவை எடுங்கள்.

காலைக்கதிர் Kalaikkathir

# மட்டுநகரில் கொலை மற்றும் ஆலயங்களில் குண்டுவைத்து மோசடி செய்தவர்களுக்கு வாக்களிக்கப் போகின்றீர்களா?

## இரா.துரைரெத்தினம் கேள்வி



மட்டக்களப்பு மாவட்டத்தில் ஊழல் மோசடி செய்த பல மோசடிக்கு சொந்தகாரர்களும் படுகொலை செய்தவர்களும் பல படுகொலைக்கு காரணமாக இருந்ததுடன் ஆலயங்களுக்குள்ளே குண்டுவைத்த மோசடியாகப் பெற்ற பணத்தை மக்களுக்குச் செலவு செய்துவரும் மோசடிகாரர்களுக்கும் தமிழ் தேசியத்தை சிதைப்பதற்காக வாக்குகளை பிரிக்க களமிறக்கப்பட்ட சுயேச்சைக்குழுக்களுக்கும் வாக்களிக்கப் போகின்றீர்களா? மக்களே சிந்தியுங்கள் எனச் சங்கு சின்னத்தில் போட்டியிடும் முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெத்தினம் தெரிவித்தார்

மட்டக்களப்பு வாவிகரை வீதியிலுள்ள ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சிகாரியாலயத்தில் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற ஊடகமாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் மக்களுக்குச் சேவை செய்யக் கூடிய நல்ல திறமையான - நேர்மையான - ஆரோக்கியமுள்ள ஊழல் மோசடி அற்ற பிரதி நிதியைத் தெரிவு செய்கின்றதற்காகவே இந்த தேர்தல் நடத்தப்படுகின்றது.

இந்த தேர்தலில் மாவட்டத்தில் திறமையா னவர்களையும் நல்லவர்களையும் ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களைத் தெரிவுசெய்ய மக்கள் தயாராக இருக்கின்ற வேளையில் பல ஊழல் மோசடி செய்த பல படுகொலைகளைச் செய்தவர்கள் 14ஆம் திகதி நடக்கப் போகும் தேர்தலில் அந்த மோசடி செய்த பணத்தை மக்களுக்கு செலவு செய்து வருகின்றனர்.

தமிழர்கள் உரிமைதொடர்பாக மாவட்டத்திலுள்ள தமிழ் அனைத்துகுடும்பங்களும் ஏதோஒருவகையில் உயிரூட்டியது. உயிர்த் தியாகம் செய்ததுடன் பொருள்சேதம் மற்றும் பல இழப்புக்களைத் தமிழர்கள் சுதந்திரத்திற்காக ஒவ்வொரு தனிநபர்களும் சந்தித்தனர். இந்த நிலையில் இந்த மோசடிகாரர்கள் உங்கள் வாக்குகளைப் பெற்றுக் கொண்டு எவ்வளவு மோசடி செய்ய முடியுமே அனைத்து மோசடிகளையும் செய்து குண்டுகளையும் வைத்து படுகொலைகளையும் செய்துள்ளனர்.

எனவே இப்படிப்பட்ட மோசடி செய்த வேட்பாளர்களுக்கு நீங்கள் வாக்களிக்கப் போகின்றீர்களா? அல்லது தேர்தலில் மிகவும் திறமையான நேர்மையாகத் தமிழ் மக்களுக்குச் சேவை செய்யக் கூடிய பிரதி நிதியைத் தெரிவு செய்வதற்காக கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் குறுக்காளே புகுந்து வாக்குகளை பிரிப்பதற்காக ஈடுபடுகின்ற சுயேச்சைக்குழுக்களுக்கு வாக்களிக்கப் போகின்றீர்களா?

எனவே இவ்வாறனவர்களுக்கு வாக்களிப்பின் ஊடாக மாவட்டத்தில் பெறக்கூடிய 4 தமிழ் பிரதிநிதிகளை நாங்கள் இழப்போம். எனவே இழப்பதற்கு எந்தவொரு தமிழனும் சம்பந்தப்பட்டவராக இருந்து விடமாட்டார்கள் என நான் நம்புகின்றேன். அதனடிப்படையில் நான்கு தமிழர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள் என்ற சிறப்பான செய்திகளை 15 ஆம் திகதி வழங்குவார்கள்.

தமிழ்த் தேசியத்தின் பால் இந்த மாவட்ட மக்கள் செய்த தியாகங்கள் என்பது விலைமதிக்க முடியாதது. அப்படிப்பட்ட தமிழ் குடும்பங்களில் தமிழ்த் தேசியத்தை உடைத்து சின்னா பின்னமாக்கி அதை பலவீனப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் சதியை முறியடிப்பதற்கு சங்கு சின்னத்துக்கு வாக்களிப்பதன் ஊடாகவே அந்தச் சதியை உங்களால் முறியடிக்க முடியும். தமிழ்த் தேசியத்தைப் பாதுகாக்க முடியும்.

எனவே எதிர்காலத்தில் மாவட்டத்தில் சிறப்பான செயற்திட்டங்களை அமுலாக்கவும் சரியான திட்டங்களை அமுல்படுத்துவதற்கும் தமிழ் தேசியத்தை பாதுகாப்பதற்கும் திட்டமிட்டவாறு அபிவிருத்தி வேலைகளை செய்வதற்கும் சங்கு சினம் ஊடாக இந்த மக்களிடம் ஆணைகேட்டு நிற்கின்றோம். அந்த ஆணைகளை வழங்கும் பட்சத்தில் நாங்கள் பேரம் பேசும் சக்தியாக வலுப்பெற முடியும். எனவே சங்கு வலுப்பெற மக்கள் வழங்குகின்ற ஆதரவுகளை கேட்டு நிற்கின்றோம்.

இந்த ஆணைக்கேட்டு நிற்பது எங்களது தனிப்பட்ட விடயத்துக்கு அல்ல மக்களின் நேர்மையான விடயத்தைச் செய்து முடிப்பதற்கும் சரியான கொள்கைகளையும் தேவையான அதிகாரங்களை அமுல்படுத்துவற்கும் சர்வதேச ரீதியான விடயங்களைப் பேசுவதற்கும் நாங்கள் ஓர் அங்கீகாரத்தை கேட்டு நிற்கின்றோம்.

ஆகவே, இந்த நம்பிக்கைக்குப் பாத்திரமாக நீங்கள் உங்களுடைய ஒவ்வொரு வாக்குகளையும் சங்கு சின்னத்துக்கும் எனது 5 ஆம் இலக்கத்துக்கும் வாக்களிப்பதன் ஊடாக அங்கீகாரத்தை பெறுவதன் ஊடாக நல்ல செயற்திட்டங்களை முன்வைக்க தயாராக இருக்கின்றேன்.

அதேவேளை, கடந்த காலத்தில் தேர்தலைகேட்டு பல மோசடிக்கு சொந்தக்காரர்களாக இருக்கின்ற பிரதிநிதிகளுக்கு வாக்களிக்க போகின்றீர்களா? தமிழ்த் தேசியத்தை அழிப்பதற்காக உடந்தையாக இருந்தவர்களுக்கு வாக்களிக்கப் போகின்றீர்களா? தமிழர்களின் ஒற்றுமையைக் குலைப்பதற்கு உடந்தையாக இருந்தவர்களுக்கு வாக்களிக்க போகின்றீர்களா? அல்லது நல்ல செயற்திட்டங்களையும் தமிழ்த் தேசியத்தைப் பாதுகாக்க செயற்திட்டம் உள்ளவர்களுக்கு நீங்கள் வாக்களிக்க போகின்றீர்களா?

அல்லது தற்போது ஆட்சி பீடம் ஏறிய ஜேவிபி கட்சி தமிழ் மக்களுக்கு எதிரான 5 செயற்திட்டங்களைத் தீட்டியுள்ளனர் அதில் முள்ளிவாய்கால் படுகொலையை சர்வதேச ரீதியாக எடுக்கப்பட்ட முடிவுகளை விசாரிக்க முடியாது எனவும், கடந்த 2006 ஜூன் 30 ஆம் திகதி இணைந்திருந்த வடக்கு கிழக்கை இரண்டாக நீதிமன்றம் ஊடாக பிரித்ததுடன் வடக்கு கிழக்கை அழிப்பதற்காக இராணுவத்திற்கு படைபடையாக இளைஞர்களை சேர்த்து கொடுத்து தமிழ் மக்களை படுகொலை செய்ததுடன் கடந்த கால அமைச்சரவை தீர்மானித்த சம்பள அதிகரிப்பை விடையங்களை அமுல்படுத்தாமல் இருக்கின்றதுடன் வடக்கு கிழக்கில் வெளிநாடுகள் முன்வைத்த அபிவிருத்தி திட்டங்களை வெளிநாடு தலையிடக்கூடாது என அதனை நிறுத்துவதற்கான முயற்சித்துவரும் இந்த அரசு இலங்கை அணிசேர நாடுகள் எனச் சொல்லிக் கொண்டு அம்பாந்தோட்டையையும் கொழும்பையும் சீனாவுக்கு விற்றுவிட்டு ஏனைய நாடுகளை வரக்கூடாது. நாங்கள் அணிசேர நாடுகள் எனச் சொல்லிக் கொண்டு இனவாதம் இல்லை என்று தெரிவித்துக் கொண்டு இனவாத செயலை செய்துவருகின்ற இந்தக் கட்சிக்கு வாக்களிக்கப் போகின்றீர்களா?

கடந்த காலத்தில் வாக்களித்த எங்கள் வாக்குகளை வைத்துக் கொண்டு மோசடியில் ஈடுபட்ட தற்போது உள்ள வேட்பாளர்களுக்கு வாக்களிக்கப் போகின்றீர்களா? மக்களே, சிந்தியுங்கள் தமிழ் மக்களின் ஒற்றுமைக்கான சின்னம் சங்கு எனவே சங்கு சின்னத்தில் எனக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டார். (05)

# நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு மாத்தறை கரையோர வாகன போக்குவரத்துக்கு மட்டுப்பாடு

எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலையொட்டி, மாத்தறை ராகுல் கல்லூரியில் வாக்கு எண்ணும் மையம் நிறுவப்பட உள்ளது.

எனவே, நாடாளுமன்ற தேர்தல் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்துத் திட்டத்தின் படி, எதிர்வரும் 12 ஆம் திகதி பிற்பகல் 02.00 மணி முதல் 13 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை, வாக்குப்பெட்டிகள் சம்பந்தப்பட்ட மையங்களுக்கு அனுப்பப்படும் வரை, வீதியில் போக்குவரத்து நிறுத்தப்படும்.

எனவே, மாத்தறை கரையோர வீதியில் ரணவிரு சுற்றுவட்ட வீதியில் இருந்து எலியகந்த வரையான வீதியை தவிர்த்து பின்வரும் மாற்று வீதிகளை பயன்படுத்துமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மாத்தறையில் இருந்து கதிர்காமம் நோக்கியும் கதிர்காமத்திலிருந்து மாத்தறை நோக்கியும் செல்லும் வாகனங்கள் புதிய தங்காலை வீதி மற்றும் பழைய தங்காலை வீதியில் பயணிக்கலாம்.

(05)

# அறுகம்பே தாக்குதல் திட்டம் குறித்த அமெ. தகவல் குறித்தும் விசாரணை

## பொலிஸ் பேச்சாளர்

அறுகம்குடாவில் இஸ்ரேலிய சுற்றுலாப்பயணிகள் மீது துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டதாக அமெரிக்க நீதித்திணைக்களம் தெரிவித்துள்ளமை குறித்து விசாரணைகள் இடம்பெறும் என பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்டுவ தெரிவித்துள்ளார்.

அறுகம்குடா தாக்குதல் திட்டம் குறித்து தற்போது முன்னெடுக்கப்படும் விசாரணைகளின் போது அமெரிக்கா தெரிவித்துள்ள தகவல் குறித்தும் ஆராயப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர் போதைப்பொருள் குற்றச்சாட்டுகளிற்காக இலங்கையில் சிறைத்தண்டனை அனுபவித்தவர் எனத் தெரிவித்துள்ள பொலிஸ் பேச்சாளர் பொலிஸாரும் ஏனைய தரப்பினரும் விசாரணைகளை மேற்கொள்ளும்போது அவர்கள் வெளிநாட்டுத் தூதரகங்களுடன் நிச்சயம் தொடர்புகொள்வார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

ரொனால்ட் டிரம்பை கொலை செய்ய முயன்றார் என தெரிவிக்கப்படும் பர்ஹாட் சகேரி என்ற நபர் இலங்கையில் இஸ்ரேலிய சுற்றுலாப்பயணிகள் மீது தாக்குதலை மேற்கொள்ளும் திட்டம் தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததாக தெரிவித்துள்ளார் என அமெரிக்க நீதி திணைக்களம் தெரிவித்துள்ளது.

(05)

# தமிழ், முஸ்லீம் கட்சிகளுடன் சேர்ந்து தேசிய ஆட்சிக்கு திட்டம்

## விஜித ஹேரத் தெரிவிப்பு



நாடாளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பெரும்பான்மை ஆசனங்களை பெறுவது குறித்து நம்பிக்கையுடன் உள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சர் விஜிதஹேரத் தேசிய ஐக்கியத்தை உருவாக்குவதற்காக தமிழ் முஸ்லீம் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து தேசிய ஐக்கிய அரசாங்கத்தை அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம் என தெரிவித்துள்ளார்.

புதிய நாடாளுமன்றத்தில் அதிக ஆசனங்களை கைப்பற்றுவது குறித்து தேசிய மக்கள் சக்தி நம்பிக்கையுடன் உள்ளதாக தெரிவித்துள்ள அவர் எனினும் அரசியல் சூழ்நிலையை வலுப்படுத்துவதற்காக தனது கட்சி தமிழ் முஸ்லீம் கட்சிகளை பிரதிநிதித்துவம் செய்யும் நாடளுமன்ற உறுப்பினர்களிற்கு அழைப்பு விடுக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

எனினும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் அழைப்பு விடுக்கப்போவதில்லை தமிழ் முஸ்லீம் நாடாளுமன்ற உறுப்பினர்களிற்கே அழைப்புவிடுப்போம் என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் முஸ்லீம் சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தேசிய ஐக்கிய அரசாங்கத்தை அமைப்பது குறித்த பேச்சுக்கு நாங்கள் தயாராகவுள்ளோம், நாங்கள் ஏற்படுத்த விரும்பும் ஐக்கியத்தை இதன் மூலமே ஏற்படுத்த முடியும் என தெரிவித்துள்ள விஜித ஹேரத் தேசிய ஐக்கிய அரசாங்கத்தை ஏற்படுத்தாவிட்டாலும் தேசிய மக்கள் சக்தியால் வெற்றிகரமாக ஆட்சி செய்ய முடியும் அனைத்து சமூகங்களிற்காகவும் பணியாற்ற முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இனித் தமிழ் மக்களே முடிவு செய்யவேண்டும்

**பொதுத்தேர்தல்பரப்புரைகள்நேற்றுநள்ளிரவுடன்முடிவுக்கு வந்துவிட்டன. இன்றும் நாளையும் மக்களைச் சிந்திக்க அனுமதிப்பதற்கான அமைதிக்காலம். வியாழக்கிழமை வாக்களிப்பு.**

**இலங்கையின் பத்தாவது நாடாளுமன்றத்துக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக மக்கள் தமது முடிவைத் தெரிவிக்க இன்னும் இரண்டு நாள்கள் மட்டுமே இருக்கின்றன. இந்தக் காலத்தில் யாரைத் தேர்ந்தெடுப்பது என்பது குறித்து மக்கள் நன்கு சிந்தித்து வாக்களிப்பது கட்டாயம். தவறானவர்களைத் தெரிவு செய்து அனுப்பிவிட்டு பின்னர் கவலைப்படுவதில் அர்த்தம் இல்லை.**

**இம்முறை தேர்தல் பரப்புரைகள் அமைதியாகவும் ஆர்ப்பாட்டங்கள்அதிகம்இல்லாமலும்நடந்துமுடிந்திருப்பதைக் காண முடிந்தது. பரப்புரைக் கூட்டங்கள், அதற்கு மக்களை இழுப்பதற்கான இசை நிகழ்வுகள், வேடிக்கை விநோதங்கள் எவற்றையும் காணவில்லை. இத்தகைய கூட்டங்கள், பரப்புரைகளுக்காக கட்சிகளுக்குக் கிடைக்கும் நிதி உதவி 70 சதவீதம் வரை குறைந்திருக்கின்றது என்று பஃவ்ரல் என்கிற தேர்தல் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.**

**பொருளாதார நெருக்கடி, அரசியல் தொடர்பான சில விரக்தி, தற்போதைய அரசியல் சூழலில் அரசியல் தலைமைகளிடம் இருந்து நன்மைகளைப் பெற முடியாது என்ற எண்ணம் ஆகியனவே இவ்வாறு கட்சிகளுக்கும் சுயேச்சைகளுக்கும் நிதி ஆதாரங்கள் குறைவதற்கான காரணம் என்றும் அந்த அமைப்புக் கூறுகின்றது.**

**இதனால் பல வேட்பாளர்களின் பரப்புரைகள் மந்தமாக இருந்தது என்று அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவிக்கிறார். வெளிநாடுகளில் இருந்து தேர்தல் காலங்களில் இலங்கைக்கு வந்து பரப்புரைகளில் ஈடுபடுபவர்களில் பலர்கூட இந்தத் தேர்தலுக்கு வரவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.**

**வழக்கமாக, தேர்தல்களின்போது, வேட்பாளர்களின் தேர்தல் பரப்புரைகளுக்காக தொழிலதிபர்கள், முதலாளிகள் நிதியை அள்ளிக்கொட்டுவார்கள். இந்தமுறை அதற்கான வழிகள் அடைக்கப்பட்டிருந்தன.**

**தேர்தல் பரப்புரைச் செலவுகள் பெருமளவில் அதிகரித்திருந்ததும் பரப்புரைகள் பரபரப்பாக இல்லாமல் இருந்ததற்குக் காரணம் என்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவிக்கின்றன.**

**தேர்தல்பரப்புரைகள்விளம்பரங்களுக்காகசெலவிடப்பட்ட பணமும் கடந்த தேர்தலுடன் ஒப்பிடும்போது இரண்டு மடங்கு குறைந்துள்ளது என்று அவதானிப்புக்கள் கூறுகின்றன. தேர்தல் செலவுக்கான வரம்புகள் விதிக்கப்பட்டிருப்பதும் விளம்பரங்களுக்கு பணம் செலவழிப்பது குறைந்ததற்கான மற்றொரு காரணம் என்று கூறப்படுகின்றது.**

**இம்முறை வீடு வீடாகச் சென்று பரப்புரை செய்வது அதிகரித்துள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவிக்கின்றன. பொதுத் தேர்தலில் போட்டியிடும் 8,000 வேட்பாளர்களில் 7,000 பேர் இப்படி நேரடி பரப்புரைகளில் ஈடுபட்டனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இருந்தாலும் பரப்புரைகள் பரப்பாக இல்லாததை குறிப்பிட்டுச் சொல்லியே ஆகவேண்டும்.**

**குறைவான பரப்புரைகள், கவனவீர்ப்புக்கள் மக்கள் தமது தெரிவு குறித்து நிறையச் சிந்திப்பதற்கான நேரத்தையும் காலத்தையும் வழங்கியுள்ளன. எனவே அதனை நன்கு பயன்படுத்திக்கொண்டு, இன நலனை முன்னிறுத்தி தமிழர்களின் இருப்பு, விடுதலை, அபிவிருத்தி என்பவற்றை கருத்தில் எடுத்து யாருக்கு வாக்களிப்பது என்பதை மக்கள் தீர்மானிக்கவேண்டும். பல தெரிவுகள் தமக்கு முன்னால் உள்ள நிலையில் சிறந்த தலைமையைத் தெரிந்தெடுத்து முன்னகர்ந்து செல்வது இப்போது மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.**

## ஊழலை ஒழிக்க அநுர அரசை பலப்படுத்தியேயாகவேண்டும்

### ஜனநாயக இடதுசாரி முன்னணி வேட்பாளர்

ஊழலை ஒழிப்பதற்கு அனுர அரசை பலப்படுத்த வேண்டும்என்றுஜனநாயகஇடதுசாரிமுன்னணியின் வன்னி மாவட்ட வேட்பாளர் சங்கரலிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அனுரகுமாரவின்ஆட்சியைப்பலப்படுத்துவதற்கான கடமை இடதுசாரிகளாகியாகிய எமக்கு இருக்கிறது. இம்முறை மக்களிடம் எமக்கு நல்ல வரவேற்பு இருக்கின்றது

மக்களுக்கு இன்று பெரும் பிரச்சினைகள் இருக்கின்றன. கிராமங்களின் உட்கட்டுமான தேவைகள் அதிகரித்துள்ளது. மீனவக் குடும்பங்கள் பல துன்பங்களை அனுபவிக்கின்றனர். பல குடும்பங்கள் ஒருநேர உணவை உண்ணுவதே கடினம் என்ற ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. எனவே ஊழலற்ற அனுரவின் ஆட்சியை பலப்படுத்துவதே எமது நோக்கம்.

எமது சின்னத்துக்கு அளிக்கும் ஒவ்வொரு வாக்குகளையும் அனுரவிற்கான வாக்குகளாக கருதுங்கள். இந்த ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான சூழ்ச்சி நடக்கின்றது. அதற்கு நாம் அடிபணியாமல் அதனைப் பாதுகாக்கவேண்டும். அந்த வகையில் அனுபவம் உள்ளவர்களை இம்முறை நாம் களம் இறக்கியுள்ளோம். சுவர்க்கடிகார சின்னத்தில் வன்னியில் போட்டியிடும் நாம் ஒன்றுக்கு மேற்பட்ட ஆசனங்களை பெறுவோம். என்றார்.

## மாவீரர் தினத்தை தடையின்றி அனுஸ்டிக்க இடம்தரவேண்டும்

### சுயேச்சை வேட்பாளர் மயூரன் வலியுறுத்து

மாவீரர் தினத்தை தடையின்றி அனுஸ்டிக்க இடமளிக்கப்படவேண்டும் எனக் கரும்பலகை சின்னத்தில் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளர் மயூரதன் தெரிவித்துள்ளதுடன் எதிர்வரும் மாவீரர் தினத்தை அனுஸ்டிக்க அரசு தடைவிதிக்கக் கூடாது என்றும் வலியுறுத்தினார்.

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தக் கட்சிகள் அனைத்துமே பழமையான கோட்பாடுகளையும், பழைய தலைவர்களையும் கொண்டுள்ளது. அவர்கள் சின்னத்தை மாத்திரம் மாற்றிப் போட்டியிடுக்கின்றனர். ஆனால் தமிழ் மக்கள் புதிய மாற்றத்தை நோக்கி சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். அந்த வகையில் நாம் கல்வியின் அடையாளமாக கரும்பலகைச் சின்னத்தில் சுயேச்சைக் குழுவினூடாக மாற்றத்தை நோக்கிப் போட்டியிடுகின்றோம்.

கல்வியில் மாற்றத்தை கொண்டுவர வேண்டும் என்பதே எமது முதலாவது நோக்கமாக உள்ளது. இன்று போதைப்பொருள் பாவனை பாடசாலை மட்டத்திற்குள் ஊடுருவும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இந்த நிலைமையை மாற்றுவதற்காக எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கல்விக்கான ஒரு மாற்றத்தை முதன்மைபடுத்தியுள்ளோம்.

இன்று பல பாடசாலைகள் பூட்டப்படும் நிலையில் உள்ளது. பாடசாலைகள் பூட்டப்பட்டால் அவற்றை திறப்பது கடினமான விடயம். அதேபோல பல்கலைக்கழக அனுமதிக்கான மாணவர் உட்சேர்க்கையினை அதிகரிக்கவேண்டும். எனவே நாம் பாராளுமன்றம் சென்றால் இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு வலியுறுத்துவோம்.

சுகாதாரத் துறையில் மாற்றம் ஒன்றை செய்யவேண்டும் இன்று அரசாங்க மருந்தகம்ஒன்று கூட வன்னியில் இல்லை. ஏனைய பகுதிகளில் உள்ளது. அதனை இங்கு கொண்டு வந்தால் ஏழை மக்களுக்கு மிகவும் நன்மை பயக்கும் நிலைஉள்ளது. விவசாயிகளிற்கு உரியசந்தைவாய்ப்பு இல்லை. நெல்லுக்கு நிலையான விலை இல்லை. விவசாயிகளின் பணம் வீணடிக்கப்படுகின்றது. இவை மாற்றப்படவேண்டும்.

அத்துடன்சிறையில்உள்ளமுன்னாள்போராளிகள் அல்லது புலிஉறுப்பினர்கள் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்குமாறு ஜனாதிபதியை கேட்டு நிற்கின்றோம். கடந்த காலங்களுக்கு முன்னர் பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட கட்சி இன்று ஆட்சியமைத்துள்ளது. எனவே அவர்களுக்கும் அந்த மன்னிப்பு வழங்கப்படவேண்டும். மாவீரர்தினம் தங்குதடையின்றி நடைபெறுவதற்கு வழி ஏற்படுத்தவேண்டும். எனவே பாராளுமன்றுக்கு சென்றால் நாம் இவற்றை நிவர்த்திசெய்வதற்கான நடவடிக்கையை எடுப்போம் என்றார் (100)

## அதிகூடிய ஆசனங்களை நாமே கைப்பற்றுவோம்

### மணிவண்ணன் தரப்பு நம்பிக்கை

யாழ். தேர்தல் மாவட்டத்திலே அதிகூடிய எண்ணிக்கையிலான மூன்று நாடாளுமன்ற ஆசனங்களைத் தாம் இந்தத் தேர்தலில் வெற்றி கொள்ளுவோம் என்று தமிழ் மக்கள் கூட்டணி வேட்பாளர் மணிவண்ணன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்பாளர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் யாழ். வடமராட்சி ஊடக இல்லத்திலே செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:தமிழ்மக்கள்ஒருமாற்றத்தை வேண்டி நிக்கின்றனர், எமக்கு வாக்களிப்பதைவிட வேறு எந்தத் தரப்புக்கு வாக்களித்தாலும் எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை.

தமிழ் மக்கள் ஒரு தேசமாக வடக்கு கிழக்கிலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம், எமது சியநிர்ணய உரிமை தமிழர் தேசம் அங்கீகரிக்கப்பட்ட தீர்வுதான் எமது தீர்வாக இருக்கும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கை. 13ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களின் தீர்வாக ஒருபோதும் இருக்கப் போவதில்லை, ஆனால் 13ஆவது திருத்தச் சட்டம் அரசமைப்பிலே இருப்பதன் காரணமாக அதில் சொல்லப்பட்ட விடயங்கள் அமுல்படுத்தப்படவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை. அதேநேரம் மாகாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதிலும் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை. ஆனால் அது தமிழ் மக்களின் தீர்வல்ல, அது பற்றி நாம் மிகத் தெளிவாக இருக்கிறோம், அதனை யாரும் எமக்கு திணிக்கவோ அல்லது ஏமாற்றவோ முடியாது என்பதில் நாம் மிக உறுதியாக இருக்கிறோம்.

ஒற்றையாட்சிக்குட்பட்டு எந்தவொரு தீர்வும் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமையப்போவதில்லை.எமதுதேசம்அங்கீகரிக்கப்பட்ட ஒரு சமஷ்டிப் பொறிமுறையைத் தான் நாம் எமது தீர்வாக முன்வைக்கிறோம். இரு தேசம் ஒரு நாடு என்பதில் இருந்து நாம் வெளியேறவில்லை, அதிலிருந்து நாம் வெளியேறினோம் என்று கூறுவது தவறான விடயம். இரு தேசம் என்பது பற்றி நாம் கூறிவந்த விடயம் இலங்கையில் இரு தேசம் மாத்திரம்தான் உள்ளது என்று.

இலங்கையில் இரு தேசம் இருக்கிறதா அல்லது மூன்று தேசங்கள் இருக்கிறதா என்பது வேறு விடயம். எம்மைப் பொறுத்தவரை தமிழ் மக்கள் ஒரு தேசம் அது அங்கீகரிக்கப்படவேண்டும் அதில் எந்தவொரு விட்டுக் கொடுப்புக்கும் இடம் கிடையாது. இங்கு பல

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# அதிகூடிய ஆசனங்களை நாமே கைப்பற்றுவோம்

4ம் பக்க தொடர்ச்சி...........

தேசங்கள் இருக்குமாக இருந்தால் அதை நாங்கள்அங்கீகரிக்கத்தயாராகவேஉள்ளோம். குறிப்பாக மலையக மக்கள் தாங்களும் ஒரு தேசம் என்று வேண்டுவார்களாக இருந்தால் மூன்று தேசங்களாக அங்கீகரிக்கப்படலாம், அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

இலங்கையில் எத்தனை தேசங்கள் இருக்கிறது என்பது விவாதம் அல்ல, தமிழ் மக்கள் வடக்கு கிழக்கு இணைந்த தேசமாக வாழ்ந்து வருகிறார்கள் அத் தேசம் அங்கீகரிக்கப்பட வேண்டும், அந்த நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் கிடையாது.

கேள்வி:- தமிழ் மக்களின் பிரச்சினையை, இனப்படுகொலை விவகாரத்தை சர்வதேசத்திற்கு எடுத்துச் செல்லுதல் மற்றும் தீர்வு விடத்தில் கூட்டுப் பொறுப்போடு செயற்படுவதா அல்லது தனித் தனிக் குழுக்களாகப் பிரிந்து நின்று செயற்படுவதா சிறந்தது?

பதில்:- நிச்சயமாகக் கூட்டாகத்தான் இயங்க வேண்டும். நாம் ஒரு தரப்பாக தமிழ் மக்களின் குரல் ஒலிக்கவேண்டும் அதுதான் தமிழ் மக்களுக்குப் பலம் அதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை.

கேள்வி: தமிழ்த் தேசியப் பரப்பிலே தமிழ்த் தரப்புக்கள் பிரிந்திருப்பது உகந்த விடயமா?

பதில்: இல்லை நிச்சயமாக பாதிப்பான விடயம்! எம்மைப் பொறுத்தவரையிலே இத் தேர்தலில் வெல்வது உறுதி! இந்த வெற்றியின் பின்னர், தமிழ்த் தேசியம் தான் தங்களது இலட்சியம் என்று சொல்லக் கூடிய கட்சிகளை ஒன்றாக அணி திரட்டி, அல்லது அவர்களின் நாடாளுமன்ற பிரதிநிதிகளையாவது அணி திரட்டி அடுத்த கட்ட அரசியலை முன்னெடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய நிலைப்பாடாக இருக்கிறது.

எதிர்வரும்தேர்தல்முடிவுகளின்பின்பலரும் எம்மைக் கேட்கும் கேள்வி அமைச்சரவையில் நாம் அமைச்சுப் பதவிகளை எடுப்போமா என்பதுதான்?

ஜே.வி.பினரின் நிலைப்பாடு மிகத் தெளிவானது, தமது கட்சியினருக்கு மாத்திரம்தான் அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்படுமென்பது. இந்தக் கேள்விக்கே இங்கு இடமில்லை ஆனால் நாடாளுமன்றத்திலே தமிழ் மக்களுக்குச் சார்பானதீர்மானங்கள்நிறைவேற்றப்படுகின்ற பொழுது, தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் நிறைவேற்றும் உகந்த தீர்மானங்கள்நிறைவேற்றப்படுகின்றபொழுது அல்லது தமிழ் மக்களின் பொருளாதாரம்O கட்டியெழுப்பப்படுகின்ற தீர்மானங்கள் முன்வைக்கப்படுகின்ற பொழுது அதற்கு முழுமையான ஆதரவை நாங்கள் வழங்குவோம்.

தமிழ் மக்களுக்கு எதிரான விடயங்கள் அவர்களாலே நகர்த்தப்படுமாக இருந்தால் அதற்கு எமது கடுமையான எதிர்ப்பை வெளியிடுவோம்.

கேள்வி:- தேர்தல் களநிலவரங்கள்படி தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒவ்வொரு ஆசனங்களைப் பெறும் நிலையே காணப்படுகிறது, அவ்வாறான நிலையில் அனைவரும் கூட்டாக ஒரு கட்சியாக சேர வாய்ப்புள்ளதா, உங்கள் நிலைப்பாடு என்ன?

பதில்:- அவ்வாறான கூட்டொன்று உருவாக்கப்படுவது சாலச் சிறந்தது! ஆனால் அதற்கான வாய்ப்பிருக்கிறதா இல்லையா என்பது தொடர்பில் மற்றுய கட்சிகளுடன் நான் இதுவரை பேச்சு நடத்தவில்லை. முதலிலே இத் தேர்தலில் நாம் வெற்றி பெறவேண்டும், எமக்கு நம்பிக்கை இருக்கிறது இத் தேர்தலிலே நாம் அதிக வெற்றியை பெறுவோம். தமிழ் மக்கள் பெரும் மாற்றத்தை விரும்புகிறார்கள். அந்த மாற்றத்தைக் கொடுக்கின்ற ஒரே சக்தி நாம் சார்ந்த தமிழ் மக்கள் கூட்டணி மாத்திரம்தான். யாழ் தேர்தல் தொகுதியிலே அதிகூடிய ஆசனங்களை அதாவது மூன்று ஆசனங்களை நாம் பெறுவோம்!

அதிகூடிய நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றால் நாங்கள் ஏனைய நாடாளுமன்றப் பிரதிநிதிகளைக் கூட்டாக்குவதில் எமது செயற்ப்பாட்டை நாங்கள் முன்நகர்த்துவோம்.- என்றார்.

# ஜனாதிபதித் தேர்தலில் இழைத்த தவறை பொதுத்தேர்தலில் திருத்த வேண்டுமாம்

## துமிந்த திசாநாயக்க கூறுகிறார்



ஜனாதிபதித்தேர்தலில்இழைத்த தவறை பொதுத்தேர்தலில் மக்கள் திருத்திக் கொள்ள வேண்டும். முழு நாடாளுமன்றத்தையும் திசைக்காட்டியின்உறுப்பினர்களால் நிரப்பினால் நாடாளுமன்றமும் ஜனாதிபதிக்கு அடிபணியும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்க தெரிவித்தார்.

அனுராதபுரம் எப்பாவெல பகுதியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதித் தேர்தலில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை பதவியேற்றதன் பின்னர் மறந்து விட்டார். தேர்தல் வெற்றிக்காக ஒட்டுமொத்த மக்களையும் தவறாக வழிநடத்தி வெற்றிப் பெற்றார் என்பதே உண்மை.

சிறந்த அரசியல் மாற்றத்தை எதிர்பார்த்தேமக்கள்ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தினார்கள். இந்த ஒன்றரை மாதங்களில் அரசியலில் விரக்தி யடைந்துள்ளார்கள். இதுவே உண்மை மக்களுக்கு வழங்கிய பொய்யான வாக்குறுதிகளினால் அரசாங்கம் நெருக்கடிக் குள்ளாகியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் இழைத்த தவறை பொதுத்தேர்தலில் மக்கள் திருத்திக் கொள்ள வேண்டும். முழு பாராளுமன்றத்தையும் திசைக்காட்சியின் உறுப்பினர்களினால் நிரப்ப வேண்டும் என்று ஜனாதிபதி யாரைதிருப்திப்படுத்த குறிப்பிடுகிறார்.

ஓர்அரசியல்கட்சிபெரும்பான்மை பலத்தை கைப்பற்றினால் முரண்பட்ட அரசியல் நிலைவரமே தோற்றம் பெறும். 2020 ஆம் ஆண்டும் இவ்வாறான தன்மையே காணப்பட்டது.

நாடாளுமன்றத்தின் அதிகாரத்தை முழுமையாகக்கைப்பற்றிய கோட்டபய ராஜபக்ஷ தன்னிச்சையான முறையில் செயற்பட்டார். இறுதியில் நாடு வங்குரோத்து நிலையடைந்தது. அதேபோல் அரசியல் வங்குரோத்து நிலையும் ஏற்பட்டது.

ஜனாதிபதியின் தேசிய மக்கள் சக்திக்கு தனிப்பெரும்பான்மை பலத்தை 2020 ஆம் ஆண்டு சூழலை மக்கள் ஏற்படுத்தக் கூடாது. உணர்ச்சிகளுக்கும், வெறுப்புகளுக்கும் முன்னுரிமை வழங்காமல் பொருளாதாரத்தை பற்றி சிந்தித்து பொதுத்தேர்தலில் சிறந்த தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்று மக்களிடம் கேட்டுக் கொள்கிறேன். - என்றார். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# அம்பலாங்கொடை சூட்டு சம்பவத்திற்கு போதைப்பொருள் கடத்தலே காரணம்

## பொலிஸ் விசாரணையில் தெரிவிப்பு

அம்பலாங்கொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உரவத்த பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் பல தகவல்கள் வெளியாகியுள்ளதாக அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

அம்பலாங்கொடை, உரவத்த பிரதேசத்திற்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இனங்காணாத நபரொருவர் மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் பயணித்த கணவன், மனைவி மீது துப்பாக்கிச் சூட்டை நடத்தி அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தார்.

இதன்போது துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த கணவனும் மனைவியும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் அம்பலாங்கொடை, குளீகொட பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த கணவன், மனைவி இருவரும் போதைப்பொருள் கடத்தல்களுடன் தொடர்புடையவர்கள் எனவும் கணவன் பல முறை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

போதைப்பொருள் கடத்தல் மூலம் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்த துப்பாக்கிச்சூடு இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த மனைவியின் சகோதரனும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் போதைப்பொருள் கடத்தல் மூலம் ஏற்பட்ட தகராறு காரணமாக துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# நாகப்பட்டினம் – காங்கேசன் கப்பல் சேவை இடைநிறுத்தம்

சீரற்ற வானிலை காரணமாக கடந்த வியாழக்கிழமை முதல் சேவை நிறுத்தப்பட்டதால் இந்தியாவின் நாகப்பட்டினத்திற்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான படகுச் சேவைக்கான கட்டணத்தை முன்பதிவு செய்த பயணிகளுக்கு முழுத் தொகையும் மீள செலுத்தப்பட்டது.

இலங்கை - இந்திய கப்பல் சேவை தனியார் நிறுவனத்தின் பணிப்பாளர் எஸ். நிரஞ்சன் நந்தகோபன் தெரிவித்துள்ளதாவது -

மழையுடனான வானிலையால் கப்பல் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாள்களில் மழையுடனான வானிலையால் கப்பல் சேவையை இயக்க முடியவில்லை.

இன்று(செவ்வாய்க்கிழமை) கப்பல் சேவை வானிலை சார்ந்து தீர்மானிக்கபடும். எனவே நவம்பர் மாதம் 16 ஆம் திகதிக்கு மேல் நாங்கள் முன்பதிவு செய்யவில்லை.

சீரற்ற வானிலையால் தற்காலிகமாக கப்பல் சேவை இடைநிறுத்தப்படுவதற்கு முன்னர், கிட்டத்தட்ட 150 இருக்கைகள் முன்பதிவு செய்யப்பட்டிருந்தன.

கடல் அலையின் உயரம் மற்றும் காற்றின் திசை முன்னறிவிப்புகள் கப்பல் பயணங்களைத் திட்டமிட உதவுகின்றன. பயணிகளை ஏற்றிச் செல்வது பாதுகாப்பானதா என்பதைத் தீர்மானிக்க, இலங்கை மற்றும் இந்திய வானிலை முன்னறிவிப்புகளையும், காற்று பயன்பாடு போன்ற செயலிகளையும் நாங்கள் நம்பியுள்ளோம்.

மேலும், வடக்கு கிழக்கு பருவமழை இந்த மாத இறுதிக்குள் தொடங்கும் என்றும் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி வருவதால் வடக்கு கடல் கொந்தளிப்பாக இருக்கும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.(05)

# சுகாதார அமைச்சு அதிகாரிகள் எனக்கூறி நாட்டில் பண மோசடி

சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் எனக்கூறி பண மோசடி செய்யும் ஒழுங்கமைக்கப்பட்ட குழு தொடர்பில் சுகாதார ஊழியர்கள் மற்றும் பொதுமக்களுக்கு சுகாதார அமைச்சு விசேட எச்சரிக்கை விடுத்துள்ளது.

சுகாதார அமைச்சின் எந்தவொரு அதிகாரியும் தொலைபேசி, வட்ஸ்அப் அல்லது வேறு எந்த ஊடகத்தையும் பயன்படுத்தி இதுபோன்று பணத்தை சேகரிக்கும் அல்லது கோரும் செயலில் ஈடுபடமாட்டார்கள் என்று சுகாதார அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

எனவே, சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் எனக்கூறும் மோசடியாளர்களிடம் சிக்கி வங்கிக் கணக்கில் பணத்தை வைப்பிலிடவோ அல்லது வேறு வழிகளில் பணம் அனுப்பவோ வேண்டாம் என்றும் அறிவுறுத்தியுள்ளது. இந்த மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக ஏற்கனவே சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.(05)

# கொழும்பு லேக் ஹவுஸ் நிறுவனத்தின் கட்டடத்தின் மீது கார் மோதி விபத்து



கொழும்பு லேக் ஹவுஸ் நிறுவனத்தின் கட்டடத்தின் மீது நேற்று (திங்கட்கிழமை) காலை கார் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தின் போது லேக்ஹவுஸ் நிறுவனத்திற்கு முன்பாக உள்ள பாதுகாப்பு சுவர் சேதமடைந்துள்ள நிலையில் சாரதிக்கு காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சாரதியின் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு புறக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (05)

# கொழும்பு – குருணாகல் வீதியில் கோர விபத்து

## ஒருவர் சாவு; நால்வர் காயம்

கொழும்பு – குருணாகல் வீதியில் மல்பிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் நான்கு பேர் காயமடைந்துள்ளனர் என பொத்துஹெர பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

கெப் வாகனம் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த ஓட்டோ ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது ஓட்டோவின் சாரதியும், பின்புறத்தில் அமர்ந்திருந்த இரு பெண்களும், நபரொருவரும், குழந்தை ஒன்றும் படுகாயமடைந்துள்ள நிலையில் குருணாகல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் ஓட்டோச் சாரதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் பொல்கஹவளை பிரதேசத்தைச் சேர்ந்த 70 வயதுடையவர் ஆவார்.

இதனையடுத்து, கெப் வாகனத்தின் சாரதி சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொத்துஹெர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# காட்டு யானை தாக்குதலுக்கு இலக்காகி குடும்பஸ்தர் சாவு

மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திக்கோடை தும்பாலைக் கிராமத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை இரவு காட்டு யானைத் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் திக்கோடைக் கிராமத்தைச் சேர்ந்த 8 பிள்ளைகளின் தந்தையான கார்த்திகேசு உருத்திரகாந்தன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் பிரதே பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலை வட்டாரம் தெரிவிக்கின்றது.

தனது கருங்கல் உடைக்கும் இடத்தில் இருந்தபோதே காட்டு யானை தாக்குதலுக்கு இலக்காகி அவர் உயிரிழந்துள்ளார் என அக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளிப் பிரதேசத்தில் மிக நீண்டகாலமாகவிருந்து காட்டு யானைகளின் அட்டகாசங்கள் அதிகரித்த வண்ணமுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(05)

# ஐஸ் போதைப்பொருளுடன் சிறை அதிகாரி கைதானார்

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்கு விற்பனை செய்வதற்காக ஐஸ் போதைப்பொருளை எடுத்துச் சென்ற சிறைச்சாலை அதிகாரி, கைது செய்யப்பட்டுள்ளதாக பொரளை பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு விளக்கமறியலில் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின்படி மேற்கொண்ட விசாரணையில் இவர் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர், இரண்டு வருடங்கள் மற்றும் ஒன்பது மாதங்களுக்கு முன்னர் பணிக்காக வந்திருந்த 35 வயதுடையவர் ஆவார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடம் ஐஸ் போதைப்பொருள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(05)

# பலமான மாற்று ஜனநாயக கூட்டணியே முன்னாள் எம்.பி. ஆனந்தன் கூறுகின்றார்

தேர்தல்களத்தில் உள்ள கட்சிகளில் பலமான கூட்டணியாகவும் தமிழ் மக்களுக்கான மாற்றுத்தெரிவாகவும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியே இருப்பதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வன்னி மாவட்ட வேட்பாளருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

வவுனியாவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து, கருத்து தெரிவித்த அவர் -

வன்னியில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியானது இங்கு போட்டியிடுகின்ற கட்சிகளை விட அதிகூடிய வாக்குகளை பெற்று மூன்று ஆசனங்களை பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக்கள் இருக்கிறது.


இன்று தேர்தல் களத்தில் உள்ள கட்சிகளில் பலமான கட்சியாகவும் கூட்டணியாகவும், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியே உள்ளது. கடந்த காலங்களில் அனைவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக பயணித்த அந்த கட்சி இன்று நிலைகுலைந்து சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தமிழ்மக்களுக்காக இன்று இருக்கக்கூடிய மாற்றுத்தெரிவு ஜனநாயகதமிழ்த்தேசியகூட்டணியே. மக்களின் பல பிரச்சினைகள் இங்கு தீர்க்கப்படவில்லை. தங்களின் பிரச்சினைகளை தீர்க்க எந்த ஒரு தரப்பும் முன்வரவில்லை என்று பொதுமக்கள் ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.

புதிய அரசாங்கம் சோசலிசம் சமத்துவம் என்ற கொள்கையை முன்னிறுத்தி ஆட்சியை முன்னெடுக்கிறது. இது சிங்கள மக்களுக்கு பொருத்தமாக இருக்கும். தமிழ் மக்களுக்கு பொருத்தமில்லாத ஒன்று.

எமக்கு நீண்டகால பிரச்சினை உள்ளது. சுயநிர்ணய உரிமைக்காக தொடர்ச்சியாக எமது மக்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு நடைமுறைக்கு சாத்தியமான ஒரு விடயத்தை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும். - என்றார்.(05)

## உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிடைக்காதவர்களுக்கு முக்கிய அறிவிப்பு



எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிடைக்காத வாக்காளர்களுக்குத் தேர்தல் ஆணைக்குழு முக்கிய அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையில் குறிப்பிடப்படுவதாவது -

பொதுத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை உரிய வீடுகளுக்கு அஞ்சல் மூலம் விநியோகிக்கும் பணிகள் கடந்த 07 ஆம் திகதியுடன் முடிவடைந்தது.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிடைக்காத வாக்காளர்கள் தங்களது தேருநர் இடாப்பில் பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரிக்கு உரிய பிரதேச அஞ்சல் அலுவலகத்திற்குச் சென்று வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிடைக்காத வாக்காளர்கள் பின்வரும் நடவடிக்கைகளை கடைப்பிடிப்பதன் மூலம் தங்களது வாக்காளர் அட்டையின் பிரதியொன்றை இணையவழி ஊடாக பெற்றுக் கொள்ள முடியும்.

1. இணையத்தளத்தைப் பிரவேசித்தல்.
2. அதிலுள்ள குடிமக்களுக்கு என்பதினுள் நுழைந்து தேருநர் பதிவு விவரம் தேடல் என்ற இ-சேவையினுள் பிரதேசித்தல்.
3. தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளிட்டுத் தகவல் தேடுதல்.
4. பின்னர் தேர்தல் நடவடிக்கைகளுக்கான தேருநர் பதிவு விவரம் - பாராளுமன்ற தேர்தல் 2024 என்பதினுள் பிரவேசித்தல்.
5. இதன்போது உங்களது தேருநர் இடாப்பு பதிவுத் தகவல்களைக் காண்பீர்கள்.
6. பின்னர் உங்களது கையடக்கத் தொலைபேசி இலக்கத்தை உள்ளிட்டு வாக்காளர் அட்டையை அச்சிடு என்பதைத் தெரிவு செய்தல்.
7. பின்னர் உங்களது கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு வரும் ஓரிபி இலக்கத்தை குறியீட்டை உள்ளிடவும் என்ற இடத்தில் உள்ளிட்டு உங்களது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையின் பிரதியைப் பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.(05)

## தமிழ் வாக்காளர்கள் தமிழ் வேட்பாளர்களுக்கே தமது விருப்பு வாக்கைத் தரவேண்டும் என்பது இனவாதமல்ல

### மனோ கணேசன் தெரிவிப்பு



தமிழ் வாக்காளர்கள் தமிழ் வேட்பாளர்களுக்குமுன்னுரிமைஅளித்து தமது விருப்பு வாக்குகளை வழங்க வேண்டும்என்பதுஇனவாதம்அல்ல. அது இன பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யும் இன உரிமையாகும். நடைமுறையில் உள்ள தேர்தல் முறையின் விருப்பு வாக்கு என்ற முறைமை அதைத்தான் வலியுறுத்துகிறது என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக அவர், தமிழர்கள் சிறுபான்மையாக வாழும் கொழும்பு, கேகாலை, இரத்தினபுரி, கண்டி, கம்பஹா, பதுளை ஆகிய மாவட்டங்களில் தமிழ் வாக்காளர்கள் தமது விருப்பு வாக்குகளை தமிழ் வேட்பாளர்களுக்கு மாத்திரம் வழங்குவது அத்தியாவசியமாகும். இதுவே எமது பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொள்ள உள்ள ஒரே வழி. இதைதான் விகிதாசார தேர்தல் முறையும் வலியுறுத்துகிறது எனவும் தெரிவித்தார்.

கொழும்பு கொச்சிக்கடை ஜம்பட்டா வீதியில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறுகையில் -

தமிழர்கள் சிறுபான்மையாக வாழும் கொழும்பு, கேகாலை, இரத்தினபுரி, கண்டி, கம்பஹா, பதுளை ஆகிய மாவட்டங்களில் தமிழ் வாக்காளர்கள் கடைபிடிக்கவேண்டிய செயன்முறையை நான் எளிமையாக விவரிக்க விரும்புகிறேன்.

முதலில் நமது வாக்காளர்கள், தமது மாவட்டங்களில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்களில் வெற்றி பெறக்கூடிய அணி எது, அதன் சின்னம் எது என தீர்மானிக்க வேண்டும்.

அதன் பின்னர், அந்த அணிக்குள்ளே இருக்கும் தமிழ் வேட்பாளரின் அல்லது வேட்பாளர்களின் விருப்பு வாக்கு இலக்கங்களை கண்டறிய வேண்டும்.

அதன் பின்னர் தேர்தலின்போது வாக்குச் சீட்டில், தாம் தெரிவு செய்துள்ள சின்னத்துக்கு புள்ளடி இட வேண்டும். பின்னர் தமிழ் வேட்பாளர்களின் விருப்பு வாக்கு இலக்கங்களுக்கு புள்ளடி இட வேண்டும். அத்தோடு இந்த வாக்களிக்கும் கடமை முடிகிறது.

தமிழ்வேட்பாளர்களுக்குவிருப்புவாக்குகளைஅளித்த பின்னர் விருப்பு வாக்குகள் மீதமாக இருக்குமானால், அந்த விருப்பு வாக்கை அந்த அணியின் தலைமை வேட்பாளருக்கு அளிக்கலாம். அளிக்காமலும் விடலாம். மூன்றுவிருப்புவாக்குகளையும்பயன்படுத்தவேண்டும் என்பது கட்டாயமல்ல.

முதலில், நாம் போட்டியிடும் தொலைபேசி சின்னத்டுதுக்கு புள்ளடி இடுவது கட்டாயம். பின்னர் தமிழ் வேட்பாளரின் விருப்பு வாக்கை அளியுங்கள். கொழும்பில் மனோ கணேசன் - 11, லோஷன் - 13, கேகாலையில் பரணி - 5, இரத்தினபுரியில் சந்திரகுமார் - 6, கம்பஹாவில் சசிகுமார் - 18, கண்டியில் பாரத் - 4, பதுளையில் பகிதரன் - 4 ஆகிய விருப்பு வாக்கு இலக்கங்களுக்கு மாத்திரம் வாக்களித்துவிட்டு வாக்களிக்கும் பணியை முடிவு செய்யலாம்.

தமிழர்கள் சிறுபான்மையாக வாழும் கொழும்பு, கேகாலை, இரத்தினபுரி, கண்டி, கம்பஹா, பதுளை ஆகியமாவட்டங்களில்இதுவேநமதுபிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய எம் முன் உள்ள ஒரே ஜனநாயக வழியாகும். - என்றார். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# தமிழீழத்தின் நிர்வாகத் தலைநகரில் நின்று கேட்கிறேன்: எனக்கு மீளவும் ஆணை தருக

## கிளிநொச்சி பரப்புரைக் கூட்டத்தில் சிறீதரன் கோரிக்கை

தமிழீழத்தின்நிர்வாகத்தலைநகரானகிளிநொச்சியில்நின்றுகொண்டு, எனக்கு மீண்டுமோர் ஆணை தாருங்கள் என எனது மக்களிடம் நான் கேட்டுநிற்கிறேன்.என்று இலங்கைத் தமிழரசுக்கடசியின் முதன்மை வேட்பாளர் சிவஞானம் சிறிதரன்; தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் யாழ்.தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளரான சிவஞானம் சிறீதரனை ஆதரித்து, நேற்றையதினம் கிளிநொச்சி பசுமைப் பூங்காவில் நடைபெற்ற இறுதிப் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நடைபெறவுள்ள தேர்தல், மாற்றத்துக்கான தேர்தலாக அமையவேண்டும் என்பதில் நாங்களும் உறுதியாக இருக்கிறோம். ஆனால் அந்த மாற்றம் எத்தகையதாக அமையவேண்டும் என்பதில் எமது மக்கள் தெளிவாக இருக்கவேண்டும். இடதுசாரிக் கொள்கைவாதிகளான ஜே.வி.பியினர் ஆட்சிபீடம் ஏறியிருப்பது மாற்றத்துக்காகவெனில், புதிய ஜனாதிபதி பதவியேற்ற இந்த ஆறுமாத காலத்தினுள் மாற்றத்திற்கான நகர்வுகள் ஆரம்பித்திருக்க வேண்டும். ஆனால் புதிய ஜனாதிபதியின் ஆட்சிக்காலத்திலும் எங்கள் மீதான ஆக்கிரமிப்பின் அகலக்கால்கள் விரிந்தே இருக்கின்றன.

தென்னிலங்கை மக்கள் விரும்புகிற மாற்றம் வேறு, வடக்கு கிழக்கு மக்களுக்கு தேவையான மாற்றம் வேறு. அத்தகைய மாற்றங்களின் இருபுள்ளிகளும் இணைகின்ற இடத்தில் ஈழத்தமிழர்களின் அரசியல் உரித்துக்கான களமும், அவர்களது ஆத்ம தாகமும் அங்கீகரிக்கப்பட வேண்டும். எங்கள் மண்ணில், அடிப்படை உரிமைகளோடு எங்களை நாங்களே ஆளுகின்ற ஆட்சிமுறையே எமக்கானதும் எமது மக்களுக்கானதுமான மாற்றமாக அமையும்.

தமிழீழத்தின்நிர்வாகத்தலைநகரானகிளிநொச்சியில்நின்றுகொண்டு, எனக்கு மீண்டுமோர் ஆணை தாருங்கள் என எனது மக்களிடம் நான் கேட்டுநிற்கிறேன். இந்தத் தேர்தல் வெற்றிக்காக நீங்கள் எனக்கு அளிக்கவிருக்கும் வாக்கின் வல்லமைதான், வழக்குகளின் கூடாரமாகியிருக்கும் தமிழரசுக் கட்சியை நீதிமன்றத்திலிருந்து மீட்டு, அதன் தலைமைத்துவத்தை நான் பொறுப்பேற்பதற்கான ஏதுநிலைகளை உருவாக்கும் என்றார்.

# பொதுஜன பெரமுன கட்சியின் யாழ். அமைப்பாளர் நியமனம்

## கீதநாத்துக்கு கடிதத்தை வழங்கினார் ராஜபக்ச

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் யாழ்ப்பாணம் மாவட்ட அமைப்பாளராக கீதநாத் காசிலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

அந்தக் கட்சித் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்சவினால் குறித்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்காலத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நடைபெறும் பரப்புரைகள், பொதுக்கூட்டங்கள், மேம்பாட்டுப் பணிகள் மற்றும் ஊடகங்களுக்கான கருத்துகள் உள்ளிட்ட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கட்சி சார்ந்த அனைத்து செயற்பாடுகளும் கீதநாத் காசிலிங்கத்தின் மேற்பார்வையின் கீழ் நடைபெறும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணத்தில்....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்திருக்கிறோம்என்பதற்குப்பயனில்லை.

வடக்கு, கிழக்கு இணைந்த தாயகத்தை காப்பாற்றுவது இலங்கை தமிழ் அரசுக் கட்சிதான். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாறைமாவட்டத்திற்குதமிழ்பிரதிநிதித்துவம் இல்லாமல்போன போது இலங்கை தமிழ் அரசுக் கட்சி தனக்குக் கிடைத்த ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்தை அம்பாறைக்கு வழங்கியது. தமிழ் காங்கிரஸ் கட்சிக்குக் கிடைத்த தேசியப் பட்டியல் ஆசனம் யாழ்ப்பாணத்திற்கே வழங்கப்பட்டது.

அந்த கட்சிக்கு கிழக்கு மாகாணம் பற்றிக் கவலையில்லை - என்றார்.

## திசைகாட்டியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த பயணத்தில் இருந்து தூரமாக வேண்டாம். அவ்வாறு இடம்பெற்றால் இந்த பொருளாதாரத்தை கையாள முடியாது என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

புதிய ஜனநாயக முன்னணியில் போட்டியிடும் கொழும்பு மாவட்ட வேட்பாளர்களை ஆதரித்து நேற்று மருதானையில் இடம்பெற்ற இறுதி தேர்தல் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில்இருந்தஅனைத்துவரிசைகளையும் நாங்கள் நிறுத்தினோம். நாணய நிதியத்துடன் கலந்துரையாடி அனைத்து கடன்களையும் முகாமைத்துவம் செய்துகொண்டோம். 2028ஆம்போது நாங்கள் கடனை செலுத்துவதற்கு ஆரம்பிக்க வேண்டும். அதற்கு 2042வரை காலம் இருக்கிறது. கடன் செலுத்தவில்லை என்றால் மீண்டும் வரிசை யுகத்துக்கு செல்ல வேண்டிவரும்.

ஜனாதிபதி இதுவரை பொருளாதார இலக்கு தொடர்பில் தெரிவிக்கவில்லை. அதனால் பெரும் நிச்சியமற்ற நிலை இருந்துவருகிறது. தற்போது அரிசிக்கு தட்டுப்பாடு, தேங்காயின் விலைதேங்காய்மரத்தைவிட உயர்ந்துள்ளது. பொருட்களின் விலை தாமரைக்கோபுரம் போன்று உயர்ந்து செல்கிறது. முட்டை விலை அதிகரித்து செல்கிறது. இதற்கு தீர்வுகாண இந்த ஆளும்தரப்பால் முடியுமா?

இந்த ஆளும்தரப்பு நாணய நிதியத்துடன் எவ்வாறு கலந்துரையாடுகிறது? ஜனாதிபதி தேர்தலில் வளமான நாடு அழகான வாழ்க்கை கொள்கையைகொண்டுவந்தார்கள். அவற்றை செயற்படுத்த முடியுமா? வரி நிவாரணம் வழங்குவதாக ஜனாதிபதி தேர்தலின்போது தெரிவித்தார். அவைகிடைக்கிறதாஇல்லையா? என தெரிவிக்க வேண்டும்.

நாடு முன்னுக்கு செல்வதாக இருந்தால் நூற்றுக்கு 8வீத வருடாந்த பொருளாதார அபிவிருத்தி இருக்க வேண்டும். இவற்றை எவ்வாறு பெற்றுக்கொள்வது? சிறிலங்கன் விமான சேவையை வைத்துக்கொள்வதா எனதெரிவிக்க வேண்டும். திசைகாட்டி முன்வைத்திருக்கும் பொருளாதார வேலைத்திட்டத்துக்கு என்ன நடந்திருக்கிறது.

மக்கள் விடுதலை முன்னணியின் பொருளாதார வேலைத்திட்டத்துக்கு அமைய ஆளும்தரப்பை நிர்வகிக்க முடியுமா? தேசிய மக்கள்சக்தியில்'வியத்மக'வைச்சேர்ந்தவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் ஜனாதிபதி போட்டாபயவை இல்லாமலாக்கினார்கள். இவர்களையும் இல்லாமலாக்க அவர்கள் தற்போதுதிசைகாட்டியில் போட்டியிடுகின்றனர்.

நாட்டுக்குத் திறந்த பொருளாதாரம் இருக்க வேண்டும். நான் எப்போதும் பொருளாதாரத்தை திறந்து விட்டிருந்தேன். திசைகாட்டியில் இருக்கும் திட்டங்கள் அனைத்தும் தோல்வியடைந்துள்ளன. அது தொடர்பில் தற்போது உறுதிப்படுத்தப்பட்டு வருகிறது. அதனால்நாங்கள்அறிமுகப்படுத்திய பயணத்தில் செல்லுங்கள். இந்த பயணத்தில் இருந்து தூரமாக வேண்டாம். அவ்வாறு இடம்பெற்றால் இந்த பொருளாதாரத்தை கையாள முடியாது.

மேலும்உதயசெனவிரத்னஅறிக்கையை செயற்படுத்த, திசைகாட்டி அரச ஊழியர்கள் ஏன் எதிர்ப்பு? இந்த வேலைத்திட்டத்தை செயற்படுத்த வேண்டும். திசைகாட்டியின் பொருளாதார சபையில் வேலை செய்ய முடியாது. அந்த சபையில் வணிகக் கல்வி தொடர்பில் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். வியாபார முகாமைத்துவம், சமூகவிஞ்ஞானம் தொடர்பில் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். சமஸ்கிருத மொழி தெரிந்தவர்களும் இருக்கிறார்களாம். என்றாலும் பொருளாதாரம் தொடர்பில் அவர்களுக்கு என்ன தெரியும்.?

இது அறியாதவர்கள் இருக்கின்ற அனுபவமில்லாத அரசாங்கமாகும். ஜனாதிபதி முதல்யாருக்கும்அனுபவமில்லை.அவர்களின் வேட்பாளர்கள் யார் என்று தெரியுமா? மறைந்திருக்கும் வேட்பாளரை கண்டுபிடித்து உறுப்பினராக்குமாறு தெரிவிக்கிறார்கள். அதனால் அனுபமில்லாதவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்புவதா?

அதனால் தற்போது இருப்பது எல்போட் அரசாங்கம். எல்போட் அரசாங்கமும் எல்போட் பாராளுமன்றமும் இருந்தால் பாரிய பிரச்சினை ஏற்படும். நாடு சீரழிந்துவிடும். எனவே நாங்கள் எல்போட் அரசாங்கம் ஒன்றை அமைத்துக்கொள்வதா? பாராளுமன்றத்தை சிலிண்டருக்கு கொடுத்தால் ஏதாவது ஒன்றை செய்ய முடியும்.

அதனை நாங்கள் நடைமுறையில் காட்டி இருக்கிறோம். பொருளாதாரத்தை பாதுகாக்கசிலிண்டரில்போட்டியிடுபவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்புங்கள். குப்பைகளை அகற்றுவதற்கு திசைகாட்டியை அபான்சுக்கு அனுப்புங்கள் என்றார்.

## உயர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் விடுதலை முன்னணியினர் 1987 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முதலாவது தாய் நாடு, இரண்டாவது கல்வி என்ற கொள்கையை முன்னிலைப்படுத்தி செயற்பட்டார்கள்.

ஜே.வி.பியின் வலியுறுத்தலினால் நானும் அவர்களின் அரசியல் செயற்பாடுகளில் பகுதியளவில் இணைந்து கொண்டேன். இருப்பினும் கல்வி நடவடிக்கைகளில் விசேட அவதானம் செலுத்தி தேர்ச்சி பெற்றேன்.

கொவிட் பெருந்தொற்று மற்றும் பொருளாதார தாக்கம் ஆகிய காரணிகளால் பாடசாலை கல்வி நடவடிக்கைகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டு தேசிய பரீட்சைகளை நடத்தும் காலம் பிற்போனது.

ஆசிரியர்களின் தொழிற்சங்க போராட்டங்களினால் பாடத்திட்டங்களை நிறைவு செய்வதில் தாமதம் நிலவியது.

கல்வி பொதுதராதர உயர்தர பரீட்சையை எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி வரை நடத்துவதற்கு பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

உயர்தர பரீட்சை பாடத்திட்டம் நிறைவு செய்யாத காரணத்தால் உயர்தர பரீட்சையை பிற்போடுமாறு மாணவர்கள் வலியுறுத்துகிறார்கள்.

மாணவர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் பரீட்சையாக உயர்தர பரீட்சை கருதப்படுகிறது. ஆகவே மாணவர்களின் நியாயமான கோரிக்கையை கருத்திற்கொண்டு உயர்தர பரீட்சையை ஒருமாத காலத்துக்கு ஆளும்தரப்பு பிற்போட வேண்டும் என்றார்.

## தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

பொதுத் தேர்தலுக்கான சகல பணிகளும் நிறைவடைந்துள்ளன. சகல வாக்களிப்பு மத்திய நிலையங்கள் மற்றும் வாக்கெண்ணும்நிலையங்களின்பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது. அமைதியானதும், சுதந்திரமானதுமான வகையில் தேர்தலை நடத்துவதற்கு ஒட்டுமொத்த மக்களினதும் ஒத்துழைப்பை எதிர்பார்த்துள்ளோம்.

தேர்தல் பரப்புரைகள் அனைத்தும் இன்று (நேற்று) நள்ளிரவுடன் நிறைவடைகிறது.வேட்பாளர்கள் தேர்தல் பரப்புரைகளில் ஈடுபடுவதற்கு போதுமான காலவகாசம் வழங்கப்பட்டன.

வாக்காளர்கள் சுயமாகச் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்பதற்காகவே தேர்தல் பரப்புரைகள் அனைத்தும் முடிவுறுத்தப்பட்டுள்ளன.வேட்பாளர்கள்மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இனி தேர்தல் பரப்புரைகளில் ஈடுபடுவது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் சட்டத்துக்கு முரணாக செயற்படுபவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். பொதுத்தேர்தலின் போது வாக்காளரின் இடது கை ஆட்காட்டி விரல் மீது உரிய அடையாளமிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வாக்காளருக்கு இடது கை ஆட்காட்டி விரல் இல்லாதிருப்பின் அவரது வலது கையிலுள்ள வேறேதேனுமொருவிரலில் உரிய அடையாளமிடப்படும். இடம்பெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பின்போது வாக்காளரின் இடது கை சுண்டு விரலில் உரிய அடையாளமிடப்பட்டது.

அத்துடன் 2024.10.26 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற காலி மாவட்டம் எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் வாக்காளரின் இடது கை பெருவிரலில் உரிய அடையாளமிடப்பட்டது.

இவ்வாறான பின்னணியில் 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 38(3(ஆ) ஆம் பிரிவின் பிரகாரம், வாக்களிப்பின் போது வாக்காளிப்பதை அடையாளப்படுத்துவதை அடையாளமிடுவதில்எழும்பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில், பொதுத்தேர்தலின் போது வாக்காளரின் இடது கை ஆட்காட்டி விரல் மீது உரிய அடையாளமிடப்படும். வாக்காளருக்கு இடது கை ஆட்காட்டி விரல் இல்லாதிருப்பின் அவரது வலது கையில் உள்ள வேறேதேனுமொரு விரலில் உரிய அடையாளமிடப்படும் என்றார்.

## அதீத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனதுகட்சிஆட்சிஅமைத்தால்பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கம் உள்ளிட்ட பல விடயங்களை செய்வதாக தெரிவித்தார். ஆனால் அனுர குமார திஸாநாயக்க தற்போது ஆட்சிக்கு வந்ததும் அக்கட்சியின் பொதுச்செயலாளர் மாறான கருத்துக்களை தெரிவிக்கிறார்.

ஜேவிபி இராணுவத்துடன் பேசியே தமிழ் மக்களின் காணிகளை விடுவிக்கும் என்றால் அது சாத்தியப்படாது. ராஜபக்ச காலத்திலும் இதே நிலைதான் காணப்பட்டது.

சோசலிச வழி வந்த அனுரகுமார திஸாநாயக்க இவ்வாறு சொன்னால் காணி விடுவிப்பு என்பது குதிரைக் கொம்புதான். அப்படியிருந்தும் தேசிய மக்கள் சக்திக்கு வாய்ப்பை கொடுத்துப் பார்த்தால் என்ன என்று சிலர் கருதுகின்றனர்.

இப்போதுள்ள அரச தரப்புக்கு வாக்களித்துவிட்டு ஆறு மாதங்களின் பின்னர் யோசிப்பீர்கள். ஆகவே ஆறு மாதங்கள் வரை காத்திருங்கள். இவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்கப் போவதில்லை.

தமிழ் மக்கள் தம்மீது நம்பிக்கை வைத்து வாக்களித்துள்ளார்கள். ஆகவே இனி நாங்கள் பார்த்து கொள்கிறோம் என்றால் தமிழ் மக்கள் தமது பிரச்சினையை கையாள்வதில் நெருக்கடி ஏற்படும்.

ஊழல் இலஞ்சத்துக்கு ஒழிப்புக்கு மட்டும் ஆதரவளிக்கலாம். ஆனால் சிஸ்டம் சேஞ் என்ற நிகழ்ச்சி நிரலில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்கும் நிலை இருக்கிறதா? ஜேவிபிக்கு அதிக ஆசனம் கிடைத்தால் நாடு சீரழியும் என ஜேவிபி ஸ்தாபகர் ரோஹன விஜேவீரவே சொல்கிறார்.

தேசிய மக்கள் சக்தி 113 ஆசனங்களை பெறுவாரா என்ற கேள்வி எழுந்துள்ளது. அவ்வாறு கிடைக்காதுவிட்டால் நெருக்கடி ஏற்படும். இது சந்திரிகா குமாரதுங்க காலத்தில் நிகழ்ந்தது. ஜனாதிபதி ஒரு கட்சியாகவும் நாடாளுமன்ற பெரும்பான்மை மற்றொரு கட்சியாகவும் கிடைத்தால் நிலைமை மோசமாகும்.

தமிழர் தரப்பு சரியான ஒரு வலுவான கொள்கை கொண்ட தரப்பை ஆதரிக்கவேண்டும். தமிழ் தேசிய பிரச்சினையை கையாளக்கூடியவர்களை தவிர்த்தால் நிலைமைகள் மோசமாகும். இளைஞர்கள், யுவதிகள் அதீத கற்பனையில் மிதக்காமல் இந்த கால கட்டத்தில் யார் நாடாளுமன்றம் சென்றால் சிறந்தது என்பதை பார்த்து தெரிவு செய்ய வேண்டும் - என்றார்

காலைக்கதிர் Kalaikkathir

## எரிபொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். அங்கு உரையாற்றிய சஜித் மேலும் தெரிவித்ததாவது:

களவு, இலஞ்சம், ஊழல் ஒழிக்கப்படும், எரிபொருள் விலை குறைக்கப்படும் என தற்போதைய ஜனாதிபதி சகல தேர்தல் மேடைகளிலும் கூறினார். அவ்வாறான ஊழல் மோசடிகள் இல்லை என அனுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவர் தற்போது தெரிவித்துவருகிறார். எரிபொருள் குறைத்து மக்களுக்கு சலுகைகளை தருவதாக கூறிய இவர்கள் தற்போது மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

மின்கட்டணத்தை 33சதவீதமாக குறைப்போன் என்றார். இதனை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை தேவையில்லை. ஆனால் இன்னும் குறைத்தபாடில்லை. நாட்டை ஏமாற்றி வரும் இந்தக் குழுவிற்குப் பதிலாக, ஐக்கிய மக்கள் சக்தியை வெற்றிபெறச் செய்யுங்கள். நாட்டு மக்களுக்கு நிச்சயம் நிவாரணம் அளிக்கும் புதிய சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்திற்கு இணக்காப்பாட்டை காண்போம்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இரண்டு தடவைகள் பேச்சுவார்த்தைகளை நடத்திய போதிலும், வரிகளை குறைப்பதற்கு அல்லது சலுகைகளை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியத்துடன் தற்போதைய அரசாங்கத்துக்கு உடன்பாட்டிற்கு வர முடியாது போயுள்ளது. ஐஆகு தமது மீளாய்வைக் கூட பிற்போட்டுள்ளனர் என்றார்.

## பிள்ளையானிடம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தல்தூதுவ தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஆசாத் மௌலானா சனல்4 ஊடகத்திற்கு தெரிவித்த விடயங்கள் தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சிடம் செய்யப்பட்டுள்ள முறைப்பாடு தொடர்பில் வாக்குமூலத்தைபெறுவதற்காக பிள்ளையான் அழைக்கப்பட்டுள்ளார் என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தெரிவிக்கப்பட்ட முரணாண தகவல்கள் தொடாபில் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அழியப்போகும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை தமிழ் அரசுக் கட்சி பிளவுண்டு செயலிழந்துவிட்டது. சுமந்திரன் கட்சியின் தேசிய பட்டியலில் உள்வாங்கப்பட்ட பின்னர் கஜேந்திரகுமார், சிவகரன், சிற்றம்பலம், அருந்தவபாலன், அனந்தி, விக்னேஸ்வரன் என பலரும் வெளியேறினர். நான் 14 ஆண்டுகளுக்கு மேலாகக் கட்சி தமிழ் தேசியத்துக்கு அப்பால் செல்லக்கூடாது என்பதற்காக முயற்சித்தேன்.

தமிழ் மக்களின் ஒற்றுமைக்காக தலைவரால் தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. ஆனால் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி தனித்து போட்டியிட முடிவெடுத்தது. கூட்டமைப்பு தனி மனித செயற்பாடு அல்ல. கட்சி தனிநபரின் கம்பனியாகிவிட்டது. தமிழ் தேசியத்துக்கு யாராவது பாடுபட்டால் அவர்கள் வெளியேற்றப்படுவர்.

மக்களுடைய தமிழ் தேசியத்தை மூலதனமாக்கிவிட்டுதமதுபொருளாதாரத்தைப் பார்க்கின்றனர். வெளிநாட்டில் இருந்து கட்சிக்கு வந்தநிதிபற்றிகேள்வியெழுப்பியவிமலேஸ்வரி கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார். பதவியும்பணமும்இந்தகட்சியைஇந்நிலைக்கு கொண்டுவந்தது.

ஏன் விலகினீர்கள் எனப் பலரும் கேட்கின்றனர். அழியப்போகும் கட்சியில் தொடர்ந்து இருக்க முடியாது. அது வரலாற்றுத் தவறு. மாவை சேனாதிராசாவும் சிறீதரனும் செயலிழந்துவிட்டனர். கட்சியில் நான் காணாதவர்களே தற்போது வேட்பாளர்களாக உள்ளனர். தமிழ்அரசுக்கட்சிக்குவாக்களித்தால் சுமந்திரனே தெரிவாகுவார்.

மாற்றம் வரவேண்டும் என்பதற்காக மாற்றானுக்கு வாக்களிக்க முடியாது. அனைவரும் தமிழ் தேசிய நிலைப்பாட்டில் உள்ள கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டும். அந்த வகையில் எமது சுயேச்சைக்கு வாக்களிக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

## விசாரணைக்குப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைப்பு வந்தாலும் நாளை நான் சி.ஐ.டிக்கு செல்லமாட்டேன். நாடாளுமன்றத் தேர்தல் முடிந்தவுடன் நாடாளுமன்ற உறுப்பினராகத்தான் செல்வேன்.

விசாரணைகளுக்கு முகங்கொடுப்பதில் எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை. ஏனென்றால் நாம் தவறு செய்வில்லை. விசாரணைகளின் மூலம் அது மீண்டும் உறுதியாகும் - என்றார்

## கொடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்கொண்டிருந்தோம். நல்லாட்சி ஆளும்தரப்புப் பெற்றுக்கொண்ட முறையற்ற கடன்கள் கோட்டபய ராஜபக்ச தலைமையிலான ஆளும்தரப்புக்குப் பொறுப்பானது. அதேபோல் கொவிட் பெருந்தொற்று தாக்கத்தினால் பொருளாதார ரீதியில் மேலும் நெருக்கடிக்குள்ளானோம்.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்கள் ஆளும்தரப்புக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டனர். மக்களின் உண்மையான போராட்டத்தை ஒரு தரப்பினர் தங்களின் அரசியலுக்காக பயன்படுத்தி வெற்றிப் பெற்று தற்போது ஜனாதிபதியாகி அதிகாரத்தையும் கைப்பற்றியுள்ளார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் கட்சியை பாதுகாக்க வேண்டும் என்பதை முன்னிலைப்படுத்தியே போட்டியிட்டோம். கட்சியின் சார்பில் களமிறங்காமல் பிற தரப்பினருக்கு ஆதரவு வழங்கியிருந்தால் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இன்று ஏற்பட்டுள்ள கதியே எமது கட்சிக்கும் ஏற்பட்டிருக்கும்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் கட்சியின் பெரும்பாலான சிரேஷ்ட உறுப்பினர்கள் பொதுத்தேர்தலில் போட்டியிட போவதில்லை என்று தீர்மானித்து இளம் தலைமுறையினருக்கும், புதியவர்களுக்கும் இடமளித்துள்ளார்கள்.

இதற்கமைய 40 வயதுக்கும் குறைவான 103 உறுப்பினர்களையும், 50 வயதுக்கும் குறைவான 164 உறுப்பினர்களையும், 24 பெண் பிரதிநிதிகளையும் வேட்பாளர்களாக களமிறக்கியுள்ளோம்.

பொதுத் தேர்தலின் பின்னர் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பதவி நிலைகளில் மாற்றம் ஏற்படும். கட்சியின் அடிமட்ட உறுப்பினர்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை ஏற்படுத்துவோம்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் வழங்கிய பொய்யான வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் ஆளும்தரப்பு மூச்சுத்திணறுகிறது. மாற்றத்தை எதிர்பார்த்து தேசிய மக்கள் சக்திக்கு அதிகாரத்தை வழங்கிய இளைஞர்கள் மற்றும் படித்த தரப்பினரது நிலையை கருதி கவலையடைகிறேன் என்றார்.

### அயலவர்களுக்கு

# துப்பாக்கியை காட்டி கொலை மிரட்டல் விடுத்த உப பொலிஸ் பரிசோதகர் கைது

தனது தந்தையை தாக்கிய அயலவர்களுக்கு கைத்துப்பாக்கியை காட்டி கொலை மிரட்டல் விடுத்த உப பொலிஸ் பரிசோதகர் கைது செய்யப்பட்டுள்ளார் என ஆனமடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் ஆனமடுவ தர்மபால பிரதேசத்தைச் சேர்ந்த கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவில் கடமையாற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ஆவார்.

உப பொலிஸ் பரிசோதகரின் தந்தையை அவரது அயலவர்கள் கடந்த 7 ஆம் திகதி அன்று பலமாக தாக்கியுள்ளனர்.

இதனையடுத்து, சந்தேக நபர் தனது அயல் வீடுகளுக்கு சென்று அவர்களிடம் கைத்துப்பாக்கியை காட்டி கொலை மிரட்டல் விடுத்து தாக்குதல் நடத்தியுள்ளார் எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆனமடுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சற்று நேரத்தில் குறித்த மோட்டார் சைக்கிள்களுக்கு பின்னால் முன்னாள் அமைச்சர் றிசாத் பதியூதீனும் அவரது ஆதரவாளர்களும் பயணித்த வாகனத் தொடரணிகள், கூட்டம் இடம்பெற்றுக் கொண்டிருந்த பகுதிக்கு அருகே உள்ள பிரதான வீதி ஊடாகப் பயணித்தன.

இதன்போது, இரு தரப்பு ஆதரவாளர்களுக்கும் இடையில் குழப்பநிலை ஏறப்பட்டதுடன் சற்று நேரத்தில் அது கலவரமாகியது. கலவரத்தில் றிசாத் பதியூதீனின் பயணித்த வாகனம் உட்பட வாகனத் தொடரணி தாக்கப்பட்டது.

றிசாத் பதியுதீன் வாகனத்திற்குள் இருந்த நிலையில் அவரது வாகன கண்ணாடி அடித்து நொருக்கப்பட்டதுடன், அவரது ஆதரவாளர்களின் வாகனங்களும் அடித்து நொருக்கப்பட்டன. தாக்குதலையடுத்து அந்த வாகனத் தொடரணி அந்த பகுதியிலிருந்து வேகமாகக் கடந்து சென்றது.

சம்பவ இடத்திற்கு வருகைதந்த பொலிசார் நிலமையை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையினை எடுத்திருந்தனர். சம்பவத்தில் காயமடைந்த இருவர் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

இதேவேளை, இவ்சம்பவம் இடம்பெறுவதற்கு முன்னர் சூடுவெந்தபுலவு பகுதியில் இடம்பெற்றகாதர்மஸ்தானின்பொதுக் கூட்டத்தில் இருதரப்பு ஆதரவாளர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்ப்பட்டிருந்ததது. கலவர நிலமை கட்டுப்பாட்டிற்குள் வந்த பின்னர் காதர் மஸ்தானின் பரப்புரைக் கூட்டம் பொலிஸாரின் பாதுகாப்புடன் தொடர்ந்து இடம்பெற்றிருந்தது.

(100)

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# இந்திய - இலங்கை மீனவர்கள் சங்கங்களின் பிரதிநிதிகள் பேச்சுகளை விரைந்து நடத்துக

## அன்புமணி கோரிக்கை



இந்திய - இலங்கை கூட்டுப் பணிக்குழுவின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி மீனவர் சிக்கலுக்கு தீர்வு காணும் வகையில் இரு நாட்டு மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்கும் பேச்சுகளை விரைந்து நடத்த மத்திய, மாநில அரசுகள் ஏற்பாடு செய்ய வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் -

வங்கக்கடலில் மீன்பிடிக்க சென்ற ராமேஸ்வரம் மீனவர்கள் 23 பேரை இலங்கைக் கடற்படையினர் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். அவர்களின் மூன்று விசைப்படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. வங்கக்கடலில் கச்சத்தீவை ஒட்டிய பகுதிகளில் மீன் பிடிப்பதற்கு தமிழ்நாட்டு மீனவர்களுக்கு அனைத்து உரிமைகளும் இருக்கும் நிலையில் அவர்களை இலங்கை கடற்படையினர் தொடர்ந்து கைது செய்வது கண்டிக்கத்தக்கது.

தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதற்கு காரணம் அவர்கள் எல்லைத் தாண்டி மீன் பிடிப்பது தான் என்று இலங்கை அரசின் சார்பில் கூறப்படுவதெல்லாம் ஏற்றுக்கொள்ள முடியாதவை. தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்படும் சூழலைப் பார்த்தாலே அதன் பின்னணியை புரிந்து கொள்ள முடியும். கடந்த 15 நாட்களில் தமிழக மீனவர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

கடந்த 27-ஆம் தேதி கைது செய்யப்பட்ட நாகை மாவட்ட மீனவர்கள் 12 பேர் இரு நாட்களுக்கு முன் விடுதலை செய்யப்பட்டனர். அதைத் தொடர்ந்து இப்போது 23 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மீனவர்கள் எப்போதும் தங்கள் நாட்டு சிறைகளில் அடைபட்டு கிடக்க வேண்டும் என்று நினைக்கும் இலங்கை அரசு, அதற்கான சதித்திட்டத்தின் அடிப்படையில் தமிழக மீனவர்களை கைது செய்து வருகிறது.

தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்குடன் கடந்த மாதம் 29-ஆம் தேதி மீனவர் பிரச்சினைக்கான இந்திய - இலங்கை கூட்டுப் பணிக்குழுவின் கூட்டம் நடைபெற்றது. அதில் மீனவர் சிக்கலுக்கு தீர்வு காணும் வகையில் இரு நாட்டு மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்கும் பேச்சுகளை நடத்த தீர்மானிக்கப்பட்டது. ஆனால், கூட்டம் முடிந்து 13 நாட்களாகியும் அதற்கான எந்த ஏற்பாடுகளும் செய்யப்படாதது வருத்தமளிக்கிறது.

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்கள் 23 பேரையும் விடுதலை செய்ய மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன், இந்திய - இலங்கை கூட்டுப் பணிக்குழுவின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி மீனவர் சிக்கலுக்கு தீர்வு காணும் வகையில் இரு நாட்டு மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்கும் பேச்சுகளை விரைந்து நடத்த மத்திய, மாநில அரசுகள் ஏற்பாடு செய்ய வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (05)

# போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி நாடுவந்த இலங்கை பிரஜை கைது

போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி நாட்டுக்கு வருகை தந்த இலங்கைப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் நேற்று திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபர் லண்டனிலிருந்து நேற்று காலை 05.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது விமான நிலை அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கொண்டு வந்த கடவுச்சீட்டு போலியானது எனத் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் கடந்த 2004 ஆம் ஆண்டு சட்டவிரோதமாக மன்னாரிலிருந்து படகு மூலம் இந்தியாவிற்குத் தப்பிச் சென்று பின்னர் அங்கிருந்து போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இங்கிலாந்துக்குத் தப்பிச் சென்று தலைமறைவாக இருந்துள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை விமான நிலைய குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.11.2024இல் வெளியிடப்பெற்றது